இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation Jaffna

2009

சித்திரை, வைகாசி, ஆனி

# Vettimaniy
# வெற்றிமணி

மணி -59

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A.(Hons)

ஓசை 08

Orient Textiles & Jewellery



மாணவர் கல்வி சிறக்க எமது வாழ்த்துக்கள்

Konigswall16(AmHBF)
44137 Dormund
Germany
Tel: 0231-162377




LIBRARIANS
12 MAY 2009
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka

Ayngaran International

AYNGARAN

மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்


30, High Street, Collierswood,London SW19 2AB,UNITED KINGDOM



மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிமணி



ஸ்தாபகர்
**அமரர் மு. க. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர் :
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு. க. சு. சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*
Germany

இணையாசிரியர்
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்**
(B.A.Hons), Dip.in.Edu.

Associate Editor
**Mrs. Valanteena Elangkovan,**
(B.A.Hons), Dip.in.Edu.

கௌரவ ஆலோசகர்
**கலாநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

தொடர்புகளுக்கு:
தபால் பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்

**மக்கள் தொடர்பு**
**திரு. சு. இளங்கோவன்**
(Dpi.in.S.Sc, Dip.in.F.Sc, Dip.in.S.B.M.)
**(யாழ்ப்பாணம்)**

Dr. **கதிர்துரைசிங்கம்** (R.M.O)
**(கனடா)**

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
**(இங்கிலாந்து)**


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச் செல்கிறது.

அரவிந்தர்

# ஐம்பத்தொன்பதாவது வருடத்தில் யாழ்ப்பாணத்தில் இலவச பத்திரிகையாக வெற்றிமணி ஒலி ஐந்தாவது ஆண்டில் ஒலிக்கத் தொங்குகின்றது.



அன்பார்ந்த இனிய வாசகர்களே!

ஐம்பத்து ஒன்பதாவது வருடத்தில் இலவச பத்திரிகையாக ஐந்தாவது ஆண்டில் ஒலித்து உங்கள் கரங்களில் மலரும் இந்த வெற்றிமணி இதழ் 2010ம் ஆண்டில் தனது வைரவிழாவைக் கொண்டாட இருக்கின்றது. 1950இல் சிறுவர் மாத இதழாக ஆரம்பித்த வெற்றிமணியானது 1994ம் ஆண்டு ஜேர்மனியில் ஒலிக்கத் தொடங் கியது. ஜேர்மனியில் வெற்றிமணி மாதாந்தப் பத்திரிகையாக வெளிவருவது மட்டுமன்றி கனடா, லண்டன் ஆகிய நாடுகளிலும் வெளிவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இச்சேவைக்கு தாமாக முன்வந்து உதவும் வெற்றிமணி இணை ஆசிரியர் திருமதி. வலன்ரீனா இளங்கோவன் அவர்களுக்கும், அவர் துணைவர் திரு. சு. இளங்கோவன் (மக்கள் தொடர்பு - வெற்றிமணி, யாழ்) அவர்களுக்கும் வெற்றிமணியின் வளர்ச்சிக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவ ஆலோசகராகத் திகழும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுக்கும் வெற்றிமணி தன் பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றது.

மேலும் இனி வெற்றிமணி வாசகர்களே பயன்பெறுவதும், பயன்தரு விடயங்களை அளிப்பதும் உங்கள் கையில்.

அன்புடன்
பிரதம ஆசிரியர்
**கலாநிதி மு.க.சு. சிவகுமாரன்**



அன்பார்ந்த வாசகர்களே!

வெற்றிமணி சஞ்சிகை 1950களில் சிறுவர் மாத இதழாக வெளிவந்தது. இதனை வெளியிட்டவர் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அன்னாரின் மறைவுக்குப் பின் 14 வருடம் ஓய்ந்திருந்த வெற்றிமணி 1994இல் ஜேர்மனியில் அன்னாரின் மகன் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்களது முயற்சியால் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது.

30 வருட இடைவெளிக்குப் பின் மாணவருக்குரிய பத்திரிகையாக 16.04.2005இல் பிறந்த முற்றத்தையே நாடி வந்தது. மாணவர்களுக்குரிய இலவச பத்திரிகையாக வெளிவந்து இன்று ஐந்தாவது ஆண்டில் ஒலிக்கத் தொடங்கும் வெற்றிமணியை யாவரும் வாசித்துப் பயனடைய வாழ்த்துகின்றேன்.

வெற்றிமணிக்கு இதுவரை காலமும் கட்டுரைகள், ஆக்கங்களை எழுதிவந்த அனைவருக்கும் வெற்றிமணி தன் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கின்றது.

அன்புடன்
இணை ஆசிரியர்
**வலன்ரீனா இளங்கோவன்**

---

**T/ SRI SHANMUGA HINDU LADIES' COLLEGE**
*(National School)*
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
Vidyalayam Road, Trincomalee, Sri Lanka.
Tel : 026 2222481 Fax : 026 2227048
E-mail : sshlc@sltnet.lk Web : www.trincoshanmuga.sch.lk

தமிழ் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக் கொண்டுவந்து அவர்களின் ஆக்கங்களை பிரசுரிப்பதன் மூலம் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வெற்றிமணியை சிறப்புற வாழ்த்துகின்றேன்.

Mrs. C. Balasubramaniam
Principal
Sri Shanmuga Hindu Ladies College
(National School)
Trincomalee

**Bd/ Tamil Girls' Maha Vidyalayam**
ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்
බ/දෙමළ බාලිකා මහ විද්‍යාලය
Badulla / பதுளை / බදුල්ල ✆ 055-2223473

இலவசமான பத்திரிகையாய் ஐந்தாவது ஆண்டிலும் ஒலிக்கத் தொடங்கி யிருக்கும் வெற்றிமணி பல்லாண்டு தமது தடத்தில் ஆழப்பதித்து தமிழ் மாணவ சமுதாயத்திற்கு சேவையாற்றவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

MRS. T. SELVARATNAM
(PRINCIPAL)
Bd/ Tamil Girls Maha Vidyalaya
Badulla.

பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை
Bt/ Paddiruppu Madhya Maha Vidyalayam,
National School
Kaluwanchikudy.

மாணவர்களின் செயற்திறனையும் வாசிப்புத் திறனையும் ஊக்குவிக்கும் வெற்றிமணியை வாழ்த்துகின்றோம்.

**Bt/ Periyakallar Central College**
KALLAR (E. P.)
Phone : 067-2229846

மாணவர்களின் கல்வி சிறக்க பெரிதும் வழிவகுக்கும் வெற்றிமணி இதழை மனமார வாழ்த்துகின்றேன்.

Mr. R. Gopalapillai
Principal
BT / Periyakallar, Central College
Kallar.

மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை, மன்னார்)

வெற்றிமணியே!
எம் விழிகளைக் கொள்ளையிட்டு எட்டுத் திக்கும் அறிவுச்சுடர் ஏற்றும் நீ வாழி!

அதிபர்
திரு. ச. சண்முகலிங்கம்

ST. JOHN'S COLLEGE, JAFFNA
SRI LANKA.

இலங்கைவாழ் தமிழ் மாணவர்களின் ஆக்கங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பணியாற்றும் வெற்றிமணி பத்திரிகையின் சேவையை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இப்படிக்கு
Rev N. J. Gnanaponrajah
Principal
ST. John's College,
Jaffna, Sri Lanka.

---

## மகாஜனக் கல்லூரி (2010) நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெற்றிமணி எழுத்தாளர் குரு அரவிந்தன் ஆதரவில் நடாத்தும்

# மாபெரும் மாணவர் சிறுகதைப் போட்டி - 2010

**பாடசாலை மாணவர்கள் 8ம் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை பங்குபற்றலாம். பாடசாலை அதிபர் மாணவர் ஆக்கத்தையும், அது அவரது சொந்தப் படைப்பு என்பதனையும் தமது பாடசாலை மாணவர் என்பதனையும் உறுதிப்படுத்தவேண்டும். பெற்றோர் பிள்ளையைப் போட்டியில் பங்குபற்ற அனுமதித்து ஒப்பமிடவேண்டும்.**

- பரிசு பெற்ற கதைகளைப் புத்தக வடிவில் பிரசுரிக்கும் உரிமை எழுத்தாளர் குரு அரவிந்தனுக்கு உரியது.
- சிறுகதை அச்சுப் பிரதியாயின் 3 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
- ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். தெரிந்து எடுக்கப்பட்டால் ஒரு கதைக்கு மட்டுமே பரிசு பெறும் தகுதியைப் பெறுவார்.
- கதைகள் வந்துசேரவேண்டிய கடைசித் திகதி 15.12.2009.
- **அனுப்ப வேண்டிய முகவரி :**

திருமதி வலன்ரீனா இளங்கோவன்
வெற்றிமணி, தபால்பெட்டி ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**1ம் பரிசு 10000. 00**
**2ம் பரிசு 7000. 00**
**3ம் பரிசு 5000. 00**
**சிறப்புப் பரிசு 2 பேருக்கு தலா 2000. 00**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலைவனத்தில் மணலுக்குள் புதைத்து வைக்கப்பட்ட இராட்ஷத விமானம்!

மாதவி



வான் கோழி தன்னை மறைக்க தலையைப்புதைக்கு மாம் மணலுக்குள் என்று கேள்விப்பட் டுள்ளோம். தலையை மறைத் தாலும் அதன் பெரும் சிறகு களும் கால்களும் காட்டிக்கொடுத்துவிடும்.


பாலைவனத்தில் தான் இந்தப்பறவை இப்படி விளையாடுகிறது என்றால் அதே பாலைவனத்தில் ஒரு வான் பறவையின் விளையாட்டைப்பாருங்கள்.

தனது செட்டைகளை நீக்கமறந்த வான்கோழி தன்னைக் காட்டிக்கொடுத்து விடும். ஆனால் இந்த வான் பறவை பாலைவனத்து மணலில் செட்டைகளை நீக்கி உடம்பை மறைத்தும் அமெரிக்க இராணுவத்தினர் (6.08.2003) கண்டு பிடித்துவிட்டனர்.

ஆம் 1990களில் பக்தாத்கிற்கு (Bagh dad) ஆயுதங்கள் விற்பனைசெய்க் கூடாது என ஐ.நா.சபை அறிவித்திருந்த வேளை இரசியாவும் பிரான்சும் மின்னியல் கருவி களை இராக்கிற்கு வழங்கியிருந்தது. அப்போது வழங்கப்பட்ட Russian MiG-25 Foxbat என்ற உருசியத் தயாரிப்பான விமானம் ஒன்று செட்டைகளை அகற்றி விட்டு 70 மீற்றர் நீளமான 25 தொன் எடையுள்ள விமானப் பகுதியை பாதுகாப்பு வலையால் சுற்றி மணலுக்குள் ஆழப்புதைத்திருந்தனர். இதனை அமெரிக்க இராணுவம் (U.S. Air Force recovery teams) கண்டுபிடித்ததைத் தொடர்ந்து பாரிய குழிவெட்டும் இயந்தி ரங்களின் உதவியுடன் விமானம் மீட்கப்பட் டது. (அதனை இங்கு படங்களில் காண லாம்.)



மீட்கப்பட்ட இந்த விமானம் மணிக்கு 2000 மைல் வேகத்தில் ஒரு ஒலியின் வேகத்தின் மூன்றமடங்கு வேகத்தில் 75 அடி உயரத்தில் பறக்கவல்லது. இது போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட இடசின் விமானங்கள் இப்படிப் புதைக்கபட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. விமானங்கள் மட்டு மல்ல இப்பாலை வனத்தில் 10,000 இற்கு மேற்பட்ட உடல்கள் கூடப் புதைக்கப்பட் டிருக் கலாம் என எண் ணப்படுகின்றது. உடல்கள் எங்கு புதைப்பது என்ற வரையறையே அற்றுப்போய்விட்டது. அது கிட்லர் கால மாவும் இருக்கலாம், நமக்குக் கிட்டிய கால மாகவும் இருக்கலாம் அது தொடர்கின்றது.



இத்துடன் அமெரிக்கர்களின் தேடுதல் ஈராக்கில் முற்றுப் பெறவில்லை. தேடுவதை விடத் தேடாதவை கிடைக்கும் போது, தேடா தவையையே தேடிவையாக எண்ணிக் கொண் டால் இவை முற்றுப் பெறும். என்ன குழப்பமாக இருக்கின் றதா? அப்படி என்றால் இதனை அரசியலாகப் பார்க்காதீர் கள் ஒரு விண்ணாணமா கப்பார்த்து விட்டுப்போங்கள்.

நன்றி : *வெற்றிமணி*
*ஆவணி 2008 ஜேர்மனி.*



# இந்துநாகரிகத்தில் முதலாவது பெண் பேராசிரியர் திருமதி. கலைவாணி இராமநாதன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் முதலாவது பெண் பேராசிரியர் திருமதி. கலைவாணி இராமநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளமை ஈழத்தமிழ்ப் பெண்களின் பெருமைக்கு ஓர் விருது எனலாம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை யின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி. கலைவாணி இராமநாதன் அவர்கள் இந்துநாகரிகத் துறையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பெரும் பங்காற்று பவர். சைவசித்தாந்தத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற இவர் இந்து சமயம் சார்ந்த பல்வகை ஆய்வுக்கட்டுரைகளை சமூகத்திற்குத் தந்துள்ளார்.

கலைப்பீடத்தின் முதலாவது பெண் பேராசிரியர் என்ற பெருமை பெற்ற அவர் தனக்குக் கிடைத்த பேரா சிரியுர் பதவி தெய்வசித்தம் என்று கூறி அதனை இறை வனுக்கு அர்ப்பணம் செய்யும் பக்குவம் போற்றுதற் குரியது.

இந்துநாகரிகத்துறையில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் அவர், இந்துமதம் கூறும் சீரிய பண்புகளை தன் வாழ்க்கை யில் கடைப்பிடிப்பதைக் காணும் போது "கற்றதொழுகு" என்னும் வள்ளுவனின் உயர்மொழிப்பதம் அவருக்கு மிகவும் பொருத்தம் என்ற நினைப்பே முன்னெழுகிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத் துறையின் முதலாவது சிறப்புப் பட்டதாரி என்ற பெருமை உடைய மூவரில் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1967இல் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த போதிலும், ஒரு வருடத்தில் அது நின்று போய்விட்டது. எனினும் பேராசிரியர் சதாசிவம் அவர்களின் பெரும் முயற்சியினால் 1968இல் கொழும்பு பல் கலைக் கழகத்தின் இந்து நாகரிகம் ஒரு தனிப் பாடநெறியாக வும் சிறப்புக் கலைப் பாட நெறியாகவும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்துநாகரிகம் சிறப்புக்கலைப் பிரிவில் கற்ற கலைவாணி இராமநாதன் அவர்கள் 1972 இல் களனி பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய அவர், 1975 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தால் நிரந்தர விரிவுரையாள ராக இணைந்து கொண்டார். பேராசிரியர் ஆ. சதாசிவம், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் எஸ். பத்மநாதன், பேராசிரியர் சுந்தரமூர்த்தி போன்ற ஆசான்களை நினைவு கூறும் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் அவர்கள், அவர்களின் தூர நோக்கில் விதைக்கப்பட்ட இந்துநாகரிகம் என்ற விதையே இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை என்ற விருட்சமாகியுள்ளது என உறுதி யோடு கூறுகிறார்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் யாழ் பல்கலைக்கழகத்தால் தனித்துறையாக உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத்துறைக்கு பேராசிரியர் கைலாசநாதக் குருக்களை அத்துறையின் முதலாவது பேராசிரியராக நிரூபித்து எங்கள் துறையின் வளர்ச்சிக்கும் பெரும் பங் காற்றினார் என்பதை நினைவுறுத்தும் அவர், பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் போன்ற சான்றாண்மை மிக்கவர்களுடன் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பேறாகவே கருதுகின்றார்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்திலே முதலாவது பெண் பேராசிரியர் என்ற சிறப்பையும் காலம் எனக்கு வழங்கியுள்ளதுடன் உலகிலே ஒரே ஒரு இந்துநாகரிகத்துறை இலங்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் மட்டுமே அமைந்திருப்பது இப் பல்கலைக்கழகத்தின் சிறப்பாகும்.

பல்கலைக்கழகம் ஒன்று வடஇலங்கையில் அமைய வேண்டும் என்பதும் சேர் பொன். இராமநாதன் அவர்களின் தீர்க்க தரிசனமாக இருந்தது.

அப்பெரியாரின் தூரநோக்கும் ஆத்மீக பலமும் சேர்ந்து இன்று அன்னாரின் அறிவியலும், ஆன்மீக இயலும் இணைந்ததொரு பல்கலைக்கழகமாக யாழ் பல்கலைக்கழ கம் வளர்ந்துள்ளமை வேறெந்தப் பல்கலைக்கழகத்திற்கும் இல்லாத சிறப்பாகும். இத்துறையில் நாம் பணியாற்றுவதும் நாம் செய்த பூர்வபுண்ணியம் என்றே கருதுகிறேன்.

எனது கணவரும் இப்பல்கலைக்கழகத்தில் விரிவுரை யாளராதலால் நான் எனது கலாநிதிப்பட்ட ஆய்வினை நிறைவு செய்வதற்கு வைத்திய கலாநிதி இராமநாதன் அவர்களின் பங்கும் அளப்பரியது.

அதுவே இன்று பேராசிரியராக உயர்வதற்கும் காரணமாயிற்று என நன்றி, பாராட்டும் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் அவர்கள் ஆய்வு நூல்களையும் பல ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

2003ம் ஆண்ட லண்டனில் நடந்த சைவ இந்து இளைஞர் மகாநாட்டில் சிறப்புப் பேச்சாளராகவும், ஜேர்மனியில் நடந்த சைவ சமய அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விரந்தினராகவும் கலந்து கருத்துரை வழங்கியுள்ளார்.

2005ம் ஆண்டு பாண்டிச்சேரியில் நடந்த உலகத் தமிழர் பண்பாட்டுக் கழக மாநாட்டிலும் கலந்து கொண்டு கட்டுரை சமர்ப்பித்துள்ளார். அதேநேரம் யாழ் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் முதலாவது பெண் பேராசிரியர் என்ற வகையிலும், உலகத்தில் இந்துநாகரிகத்தில் முதலாவது பெண் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் என்ற வகையிலும் முதல்நிலை ஈழத்தமிழ்ப் பெண்களின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக விளங்குகின்றார்.

நன்றி : வலம்புரி




# ஐரோப்பாவில் அதிசய பாலம்

கற்பனை பண்ண முடியாத பலவற்றை ஒற்று மையான முயற்சிகள் மூலம் சாதிக்கலாம் என்பதனை அடிக்கடி உலகம் நினை வூட்டத் தவறுவதில்லை. சுவீடனையும் டென்மார்க் கையும் கடல்மார்க்கமாக இணைக்கும் பாலம் இத னையே எடுத்துச்சொல்கிறது.

ஐரோப்பாவில் அதிநீளமான பாலம் இது. (Oresund Bridge) இது டென்மார்க்கில் South Copenhagen இல் இருந்து சுவிடனில் West Malmo நகரத்தை இணைக்கின்றது. இதுவரை காலமும் கடலை Ferry மூலம் கடக்க ஒரு மணித்தியாலம் சென்றது. தற்போது 20 நிமிடங்களில் உங்கள் வாகனங்களிலேயே கடக்கமுடிகிறது.


ஐரோப்பாவிலேயே அதி நீளமான பாலமாக இது அமைகின்றது. இதன் நீளம் 16.4 கி.மீ ஆகும். இப்பாலத்தினை அமைக்க 1991 ஆண்டு டென்மார்க் - சுவீடன் அரசுகள் முடிவு செய்தன. இதற்கான வரைபடம் 1994 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டு இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன. 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் சரியாக இரண்டரை வருடத்தில் பூர்த்தியாகியது.

இப்பாலத்தின் ஒருபகுதி கடலுக்கு அடியில் சுரங்கமாக அமைக்கப்பெற்று அதனூடாகச் செல்கின்றது. இதன் மூலம் கடலில் வரும் கப்பல்கள் சுரங்கப் பாலத்தின் மேலால் கடலில் தங்குதடையின்றிச் செல்ல முடிகிறது. (படத்தில் சுரங்கப் பாதையையும் பாலத்தையும் காணலாம்). இப்பாலம் 14.08.1999இல் கட்டிமுடிக்கப்பட்டதும் டென்மார்க் இளவரசர் Frederik அவர்களும் சுவீடன் இளவரசி Victoria உறவுப்பாலம் அமைத்த மகிழ்வில் பாலத்தில் வந்து கைகுலுக்கிக் கொண்டனர்.

கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கம்



## William Shakespeare (1564 – 1616)

The greatest writer in the English language William Shakespeare was a poet, play Wright and an actor. He was born in Stratford upon Avon in 1564. He spent his childhood and youth there.

Shakespeare learned to write plays which can be divided into tragedies, comedies and historical plays. The greatest tragedies of Shakespeare are Hamlet, Macbeth, Othello Romeo and Juliet and Julius Caesar.



The important comedies are Merchant of Venice, The Tempest, Much Ado About, As you like it and Twelfth Night.

Shakespeare married Anne Hathu wary. He died at New Place, Stratford on April 23rd, 1616 and was buried in a place of honour by the high altar in the startford church.


R. Subakaran
Year 7, J/St.John's College.

## ஆசிரியர்



அன்புடன் அரவணைத்து
ஆசையாய் நாமும்
படித்து முன்னேற வேண்டுமென
பண்புகள் பல சொல்லி
இன்ப வாழ்வைப் பெற்றிட
இனிதே கல்வியைப் புகட்டி
ஏற்றத்தாழ்வு இன்றியே
ஏணிபோல் எம்மை உயர்த்திடுவீரே
கசப்பான உண்மையை
இனிப்பாய் மாற்றியே
அறிவுக் கண்ணைத் திறந்து
அறிவாளியாய் எம்மை மாற்றியே
மாணவர் செல்வங்களுக்காக
இரவு பகலாய் உழைத்திடுவீரே
பாடசாலையிலே உம் வாழ்நாளில்
பாதி நாளைச் செலவிடுவீரே.

**த. ஆரணி**
தரம் 7
யா/ யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.



சி. சிந்துயன்
ஆண்டு 11
யா / முத்துத்தம்பி
மகாவித்தியாலயம்.

## ஊனத்தை வென்றிட கல்வியே வழி

மனிதா!
உன் கண்கள் இரண்டும் பார்வையிழந்து
உலகைப் பார்க்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைப் பார்க்குமடா.
மனிதா!
உன் செவிகள் இரண்டும் கேள்மையிழந்து
ஒலியைக் கேட்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைக் கேட்குமடா.
மனிதா!
உன் கால்கள் இரண்டும் வலிமையிழந்து
உன்னைச் சுமக்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைச் சுமக்குமடா.
மனிதா!
உன் உதடுகள் இரண்டும் வரண்டு
வார்த்தை பேச மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன் புகழ் பேசுமடா.
மனிதா!
உன் அங்கங்களில் இருக்கும் ஊனங்களைக்கண்டு
நீ ஏன் கலங்குகிறாய்.
உன் மனத்தில் ஏனையா ஊனம்
ஊனமில்லாத மனதோடு
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
அதுவே உனக்கு வழிகாட்டும்.

**செ. லோகேஸ்வரி**
வாழ்வக இல்ல மாணவி.

## பிரசவம்



சிறை உடைப்பு
இரத்த சகதியில்
குழந்தையின்
ஆனந்தக் கண்ணீர்.

ச. றொஜர்
கிளின்டன் குலாஸ்
ஆண்டு 11
மன். பற்றிமா ம.ம.வி.
பேசாலை, மன்னார்.

## மகளிர் தினம்




மகளிர் தினங்கள் பல வந்தன
மார்ச் எட்டில்
தீர்வின்றிச் சென்றன.
இத்தினங்கள்
பொய் இல்லை.

ஆண்டுக்கொரு முறை – அது
மீண்டும் நினைவு கூரும் தினம்
அது எப்போது வரும் என்று
எண்ணிக் காத்திருப்பர்
புலமைத்துவ பெண் விடுதலை வாதிகள்.

மாதர் விடுதலை பற்றி
மேடையில் தத்துவம் பேசி
பெண் விடுதலை பற்றி
சமத்துவக் கவிதைகள் விளாசி
களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தி
விழிப்பூட்டும் இசைகளும் இசைத்து
இது அடக்கப்பட்ட பெண்களின்
அங்கீகரிக்கப்பட்ட தினம் என்று
அர்த்தமும் கொடுத்து நிற்பர்.

வீட்டுக்குள் இருக்கும் பெண்களே
வீதிக்கு வாருங்கள்
விடுதலையை நாடுங்கள் என்று
பத்திரிகையில் மகிழ்வூட்டும்
செய்தியும் விடுத்து நிற்பர்.



பெண் வமிடுதலை என்பது
அடிப்படை முரண்பாட்டின்
ஒரு பகுதி
அது பொதுவுடமைத் தத்துவத்தின்
பிரியா நியதி
அது சமூக விஞ்ஞானத்தின்
தொடக்கப்புள்ளி
மாதர் விடுதலையின்
சிவப்புப் பள்ளி
பெண்ணுக்கு விடுதலை
அங்கேதான் உண்டு.

பெண்களே எழுவீர்
பெரும்படை கொள்வீர்
வீரமுடன் போராடி
விடுதலை பெறுவீர்!

**அன்ரனி திவ்யன்**
ஆண்டு 13
யா / சென்.ஜோண்ஸ் கல்லூரி.

## என் உள்ளத்தின் சீற்றம்

இதயம் என்னும் எழுதுகோல் கொண்டு
சீற்றம் என்னும் மைதடவி
எழுதுகிறேன் கண்ணீர்க் காவியம்.



அலைகள் இரண்டும் தாலாட்ட
அதில் உறங்கும் மீன்போல
அன்னையும் தந்தையும் சீராட்ட
செழுமையின் கரங்களில் தவழ்ந்து
குதூகலித்து மகிழும் குழந்தையென
மலர்ந்து சிரித்தவன் நான்

இன்றோ....
நெஞ்சை எரிக்கும் துரோகத்தைத் தணிக்க
கண்ணீரைத் துழைக்கழைக்கிறேன்.

நான் ஒரு மழைத்துளி – ஆனால்
விழுந்த இடம் கடற்பாறை
நான் ஒரு ரோஜாச் செடி – ஆனால்
முளைந்த இடம் பாலைவனம்
நான் ஒரு நட்சத்திரம் – ஆனால்
இரவுகளை இன்னும் தரிசிக்கவில்லை
இன்னும் சொன்னால் – நான்
தொலைந்துபோன முகவரி.

என் முகவரி தொலைந்த இடம்
உன் பொறாமைப் படுகுழி
உன் போன்ற பலருக்கு – நான்
என்ன விளையாட்டு பொம்மையோ!
பசுந்தோல் போர்த்து அன்பைச் சொரிந்து
வஞ்சந் தீர்த்த நீயெல்லாம்
ஒரு மனிதப் பிறவியன்றோ!

உறவுகள் புதைக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு
உண்மைகள் மறைக்கப்படுகையில்
என் அழுகையின் மௌனப் போராட்டம்
நீதிக் கூண்டில் ஏறி நின்று
பொய்ச் சாட்சி கூறப்பட்டு
நிரபராதி களங்கப்படுகையில் – என்
உண்மையின் மௌனப் போராட்டம்.


இன்று நான் கண்ணீரைக் கவிதையாக்கும்ஷ கோழையல்ல
உன் எல்லையை விட்டு உன் வேடத்தைக் கலைக்கப்
புறப்பட்டுவிட்ட சுதந்திரப் பறவை.

உன் வேஷம் என்னால் கலைக்கப்படுகையில்
உன் சுயரூபம் மானிடம் தொலைந்த
மிருகத்தின் கொடூரக் காட்சியாய் உலகில் விரியும்.
அன்று நீ உலகத்தின் கூரையில் இருந்து தள்ளப்பட்டு
பாவக்குழியில் புதைவது நிதர்சனம்.

**தேவராஜா விதுர்சன்**
ஆண்டு 12
விஞ்ஞானப்பிரிவு,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.





JET TRAVELS
குழுக்களாக ஐரோப்பிய நாடுகள்.
இந்தியா. இலங்கைப் பயணத்திற்கு...
சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில்
திருப்தியுடன் பறந்து செல்ல நாடுங்கள்.
4429 Sheppard Avenue East,
Scarborough, Ontario M1S 1V3-Canada.



எதனையும் செய்யாமல் முடியாது என்று எண்ணாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கஜமுகன் ஹாட்வெயர் ஆதரவில் சாதனையாளர் அரங்கு

### மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவியின் சாதனை

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி செல்வி. கஸ்தூரி சண்முகலிங்கம் தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாவோதல் பிரிவு ஐந்தில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைத் தனதாக்கி சாதனை படைத்துள்ளார்.

இவர் யாழ் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. ச. சண்முகலிங்கம் (இக் கல்லூரியின் அதிபர்) திருமதி சியாமளா சண்முகலிங்கம் ஆகியோரின் புதல்வியு மாவார். வெற்றிமணி சாதனை அரங்கு இவரைப் பாராட்டி மகிழ்கின்றது.


### யாழ். சென்.ஜோன்ஸ் மாணவனின் ஹட்ரிக் சாதனை



யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ர. சுர சாகித்யன் தேசிய மட்டத்தில் தனி இசையில் சாதனை படைத்து தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். இவர் 2003, 2005, 2008ம் வருடங்களில் தேசிய மட்டம் வரை சென்று மூன்றாவது முறையாக ஹட்ரிக் சாதனை படைத்துள்ளார்.

இவரது தந்தை பிரபல நாதஸ்வர வித்துவான், தாயார் வைத்தீஸ்வராக் கல்லூரியின் இசை ஆசிரியர். இவரை வெற்றிமணி சாதனை அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.

### யாழ். யூனியன் கல்லூரி மாணவனின் சாதனை



யா/யூனியன் கல்லூரி மாணவன் செல்வன் சு. தசாங்கன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாவோதல் பிரிவு நான்கில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்து சாதனை படைத்துள்ளார். இவர் 2007ம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் தனி இசை பிரிவு நான்கிலும் முதலாமிடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் குப்பிழானைச் சேர்ந்த திரு. திருமதி. சுந்தரமூர்த்தி தம்பதிகளின் புதல்வர் ஆவார். வெற்றிமணி சாதனை அரங்கு இவரைப் பாராட்டி மகிழ்கின்றது.

### யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் சாதனை



யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் குழுநடனத்தில் தேசிய மட்டத்தில் இம்முறையும் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்து தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர். இக் கல்லூரி மாணவர்கள் 2006ம் ஆண்டு கோலாட்டத்திலும், 2007ம் ஆண்டில் வாள் நடனத்திலும், 2008ம் ஆண்டு கோலாட்டத்திலும் தேசிய மட்டத்தில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்நடனத்தை நெறிப்படுத்தியவர் இக்கல்லூரி ஆசிரியர் கலைஞானசுரபி திரு. அனுருத்தன் ஆவார். வெற்றிமணி சாதனை அரங்கு இவர்களை வாழ்த்தி மகிழ்கின்றது.

### யா / இராமநாதன் கல்லூரி மாணவிகளின் சாதனை



யா/ இராமநாதன் கல்லூரி மாணவியான செல்வி. சிவதாரணி சிவராஜன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற தனிநடனம் பிரிவு ஐந்தில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இவருடைய தந்தையார் திரு. சிவராஜன் (அதிபர், யா/பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயம்) தாயார் பிரபல நடன ஆசிரியையும் யா/ இராமநாதன் கல்லூரி பிரதி அதிபருமான திருமதி நந்தினி சிவராஜன் அவர்களின் புத்திரியுமாவார். இவரை வெற்றிமணி சாதனை அரங்கு பாராட்டுகின்றது.



யா/இராமநாதன் கல்லூரி மாணவியான செல்வி. ஜஸ்திகா பாலகிருஷ்ணன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற தனி நடனம் பிரிவு நான்கில் மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இவரையும் வெற்றிமணி சாதனை அரங்கு பாராட்டுகின்றது.

### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவியின் சாதனை



யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி செல்வி. நிதுர்ஷா குகனேசன் அகில இலங்கைத் தமிழ் தினப் போட்டியில் ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு Iஇல் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவரை நெறிப்படுத்திய ஆசிரியர் செல்வி அனந்தநாயகி கந்தசாமி. இவர் ஆசிரியர் திரு. சு. குகனேசன் ஆசிரியை திருமதி. சாந்தமலர் குகனேசன் ஆகியோரின் புதல்வி ஆவார்.

சென்ற ஆண்டு நடைபெற்ற மேற்படி போட்டியில் இதேபிரிவில் இப்பாடசாலை மாணவர் ஒருவர் தங்கப் பதக்கம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களை வெற்றிமணி சாதனை அரங்கு வாழ்த்துவதில் பெருமை கொள்கிறது.

### யாழ் மத்திய கல்லூரியின் மற்றுமோர் சாதனை

யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் நடைபெற்ற குழு இசை பிரிவு I இல் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இக்குழுவினரை நெறிப்படுத்தியவர் இசையாசிரியர் திருமதி. உமா சிவகுமார். இவருடன் இணைந்து ஊக்கப்படுத்தியவர் ஆசிரியை கே. கலைச்செல்வி. இவர்களை வெற்றிமணி சாதனை அரங்கு வாழ்த்துகின்றது.

### யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவியின் சாதனை

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி வருணியா தில்லை நாதன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற தனி இசை பிரிவு II இல் மூன்றாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இவரை நெறிப்படுத்திய இசையாசிரியரையும் சாதனை படைத்த மாணவி வருணியாவையும் வெற்றிமணி சாதனை அரங்கு வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறது.


உ
கற்பக விநாயகர் துணை

T.P. 2833

KMH

**KAJAMUGAN HARDWARE**


**கஜமுகன் ஹாட்வெயர்**

சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

*Hardware Merchants, Importers of Building Materials, Cement, Paints, Electrical Goods, Cycles, Cycle Parts & Accessories.*

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

147, 149, Stanley Road, Jaffna.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவீனமே பெண் அடக்குமுறைக்கும் பெண்களின் வேதனைக்கும் அடிப்படைக் காரணமாகும்



## மகளிர் தின உரையில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம்

"பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் பிறந்து வந்தோம்"

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க இன்று பெண்கள் அறிவியல் மேதைகளாக ஆராய்ச்சியாளர்களாக, விமானிகளாக, நீரில் மூழ்கி முத்துக் குளிப்பவர்களாக நாட்டின் தலைவர்களாக நிர்வாகத் தலைவர்களாக, நீதிபதிகளாக, சட்டத்தரணிகளாக, விளையாட்டு வீராங்கனையாளர்களாக, சாதனையாளர்களாக சர்வதேசத்திலும் பிரகாசிக்கின்றனர்.

வீட்டிற்கும் நாட்டிற்கும் அளப்பெரும் சேவை வழங்குபவர்களாக பெண்கள் விளங்குகின்றனர். ஆண்களுடன் ஒப்பிடும்போது எத்தனையோ மடங்கு வேலை செய்பவர்களாக இன்று பெண்கள் உள்ளனர். ஆனால் அதற்கான பெறுமானம் பெண்களுக்கு வழங்கப்படுகிறதா? இருபது வீதமான பெண்கள் கூட தமக்கான உரிமைகளைப் பெற்று மகிழ்வாக வாழ்பவர்களாக இல்லை.

நாகரிக வளர்ச்சிக்கு முற்பட்ட காலங்களில் அதாவது மனிதன் பகுத்தறிவை உணர்ந்த காலகட்டங்களில் பெண்களே முதன்மையாக விளங்கினர். பெண் ஒரு சமுதாயத்தை வழிநடத்திச் செல்லும் தலைவியாக இருந்தாள். வேட்டையாடக் கற்றுக்கொடுத்தாள்; விவசாயத்தைக் கண்டுபிடித்தாள். அவளின் வழிநடத்தலை சமுதாயம் ஏற்றுக்கொண்டது.

அன்று பெருமையோடு வாழ்ந்த பெண் எவ்வாறு ஒடுக்கப்பட்டாள்; எவ்வாறு வீட்டினுள் அடைக்கப்பட்டாள். ஏன் இவளுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. புத்திசாலிகளாக வாழ்ந்த பெண்கள் எவ்வாறு கோழைகளாக்கப்பட்டனர்?

"பெண் வீட்டில் வளர்க்கப்படும் நாய்"

"எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தியே" என்றெல்லாம் வாக்கியங்களை அமைத்து வேகமாக ஏன் பரவவிடப்பட்டது? மதத்தின் பெயராலே மகளிரை அடக்கமுனைந்தது ஏன்?

கோழைத்தனமான திட்டமிட்ட முன்னெடுப்புக்களால் தெய்வமாக மதிக்கப்பட்ட தாய்க்குலம் தெருவிலே தனியாக நடமாட முடியாத அவல நிலை காண்கின்றோம். எவ்வளவு தான் ஆற்றலும் உயர் செயற்பாட்டுத் திறனும் உடையவர்களாக இருந்தாலும் பெண்கள் தொழில் செய்யும் இடங்களில் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பதை அறிகின்றோம்.

எவ்வளவுதான் படித்து உயர்நிலையில் இருந்தாலும் "சீதனம்" எனும் கொடுமையால் எத்தனையோ பெண்கள் பாதிக்கப்படுவதைக் காண்கின்றோம். வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாக சென்று படும் அவலங்கள், துன்பங்களை நாம் அனுபவிக்கின்றோம்.

இவை எவ்வாறு நிகழ்கின்றன? மகளிர் தினம் கொண்டாடினால் மட்டும் போதுமா? மீண்டும் அந்நிலை பெற நாம் என்ன செய்யப் போகின்றோம். சிந்திப்பதற்கும் செயற்பட ஆரம்பிப்பதற்கும் இந்நன்னாளை நமதாக்கிக் கொள்வோம்.

ஆண்களையும் பெண்களையும் இவ்வுலகுக்குத் தருபவள் தாய். பண்புத்தரம் கொண்ட இளைஞர்களையும் யுவதிகளையும் உருவாக்கும் உயர் பணி செய்யும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பெண்கள். பெற்று வளர்க்கும் நாங்கள் பெண் அடக்குமுறைக்கு எதிரான மனப்பாங்குடைய சமுதாயத்தை திட்டமிட்டு ஏன் உருவாக்கமுடியாது? கோழைத்தனம் மிக்க பெண் அடக்கு முறைக்கான வாக்கியங்களை மாற்றி பெண்களிற்கு மனத்தைரியத்தை வளர்க்கும் வாக்கியங்களை உருவாக்கி பரவவிடல் வேண்டும்.

புரட்சிக்கவியின் பாடல்கள் போன்று பெண் எழுச்சிக்கான பண்பான பாடல்கள் பல ஆக்கி ஒலிக்கவிடல் வேண்டும். முன்னுதாரணமாக வாழ்ந்த பெண்களின் வரலாறுகள் சாதனைகள் தொடர்பாக பத்திரிகை மூலம் விளம்பரம் செய்து சமூக சீர்திருத்தம் மேற்கொள்ளவேண்டும். சகல பெண்களும் தமது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தொழில் வாய்ப்புக்கள் அல்லது சுயதொழில் வாய்ப்புக்கள் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

இறைவனின் பார்வையில் ஆண், பெண் என்ற வேறுபாடு எதுவும் இல்லை. சகலரது உள்ளத்திலும் நீக்கமற நினைந்து பேரானத்தத்தை அனுபவிக்க முனையும் சகலருக்கும் ஆண், பெண் என்ற பேதம் எதுவுமின்றி அருள்பாலிக்கும்போது மனிதர்கள் காட்டும் பேதம் அறியாமைதான் என்பதை விளங்கிக்கொள்வோம்.

அறிவீனமே பெண் அடக்குமுறைக்கும் பெண்களின் வேதனைக்கும் அடிப்படைக் காரணம். அதனைப் போக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

"பண்புடைச் சமுதாயம் நாம் படைப்போம்
பாரினில் இன்பமாய் வாழ்ந்திடுவோம்.

*குரும்பையூர் குந்தவை.*

### நிகழ்வின் நிழல்கள்





---



# பாப்லோ பிக்காசே (Pablo Picaso 1881 – 1973)

சி. ஸ்ரீவெங்கடேஷ் (B.FA.)
(சித்திரக் கலைப் பட்டதாரி)


Pablo Picasso.

20ம் நூற்றாண்டின் உலகப்புகழ் பெற்ற ஓவியர்களின் வரிசையில் Picaso வும் ஒருவராவார். இவர் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் மட்டுமல்லாது சிற்பக் கலைஞருமாவார். "கியூபிஸம் (Cubism) / கனவடிவ வாதத்தின் தந்தையும் இவரேயாவார்.

1907ம் ஆண்டு சமகால ஓவியர்களான செசான் 'Cezanne', வான்கோ 'Vnagogh', காகெய்ன் 'Gaugain' போன்றவர்களின் ஓவியக் கண்காட்சி 'பாரிசில்' நடைபெற்ற போது நேரடியாக பாதிக்கப்பட்டவர் Picaso. இதன் பாதிப்பே அவரை 'அவிக்னோவின் நங்கையர் (Demoiselled Avignon) என்ற புகழ்பெற்ற ஓவியத்தை படைக்க தூண்டிற்று. இதைக் கண்ணுற்ற 'பரோக்' அதில் ஒரு புதிய பரிமாணத்தைக் கண்டார். தானும் செசானின் பரிசோதனைகளில் இறங்கினார். இதன் பயனாக பிக்காசோ, பரோக் இருவரினதும் வழிவந்ததே கியூபிசம் (கனவடிவ வாதம்) ஆகும்.




கியூபிசம் ஒரு பொருளை கேத்திரகணித உருவங்களாக அதாவது சதுரங்கள், முக்கோணங்கள், கூம்புகள் என்பனவற்றின் தொகுப்பாக பார்ப்பதை அடிப்படையாகக் கொண்டது.

Picaso ஸ்பானிய நாட்டில் பிறந்த ஒரு ஓவிய சிற்பக் கலைஞர். இயற்பெயர் பாப்லோ ரூஸ் பிளாஸ்கோ (Pabio Ruiz Blasco) இருப்பினும் தனது தாயாரின் பெயரான பிக்காசோவையே பயன்படுத்தினார்.

இவரின் ஆரம்பம் சோகம் ததும்பும் ஓவியங்களாகும். இதில் பிச்சைக்காரர்களும் வறுமையில் சிக்கியுள்ள ஏழைகளையும் வரைந்தார். இக்காலம் நீலக் காலம் (Blue Period) என்பர். இது 1901–1904 வரையான காலமாகும்.

1905 – 1907 வரையான காலம் இளஞ்சிவப்புக் காலம் (Rose Perood) இதில் சார்க்கஸ் வீரர்கள். பெண்ணின் தலை, அவிக்னோவின் நங்கையர் போன்ற ஓவியங்களையும், ஆபிரிக்காவின் பழைய புராதன சிற்பங்களை உலோகங்களில் ஆக்கினார்.

பிக்காசோவின் மாபெரும் படைப்பாக குவர்னிக்காவைக் குறிப்பிடமுடியும். ஸ்பானிய உள்நாட்டுப் போரின் உச்சக்கட்டத்தில் 1937ம் ஆண்டு நாஸி குண்டுவீச்சு விமானங்கள் வட ஸ்பானியிலுள்ள பாஸ்க் இனத்தவரின் வரலாற்றுச் சிறப்பள்ள தலைநகரான குவர்னிக்கா (Guernica) குடிகளைத்தாக்கிய இம்முதல் பயங்கர குண்டுவீச்சு ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றது. உடனே எழுந்த பன்னாட்டு கண்டனக் குரலின் எதிரொலியின் விளைவு. இக்குற்றத்தை வன்மையாகக் கண்டிக்க பிக்காசோ கலையைப் பயன்படுத்தினார். இதில் சோகத்திற்கு கறுப்பையும், சமாதானத்திற்கு வெள்ளையையும் கலந்து ஓவியத்தில் வரைந்திருந்தார்.



கேத்திர கணித பாணியில் இதை வரைந்துள்ளார். 1980ம் ஆண்டு முதல் இது நியூயோர்க்கின் நவீன ஓவியங்கள் அருங்காட்சியகத்தில் உள்ளது.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததும் தனித்தனிப் பொருள்களாகச் சிற்பங்களைப் படைக்க ஆரம்பித்தார். குறிப்பிடத்தக்க சிற்பங்களாக எருமைத்தலை, பசு போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

1949ல் பரிசில் நடைபெற்ற 'உலக சமாதானம்' என்னும் மகாநாட்டிற்கு சமாதானத்தின் சின்னமாக வெள்ளைப் புறாவை வரைந்து முதலில் அறிமுகம் செய்து வைத்தார். இவர் கனவடிவவாத சித்திரங்களை மட்டும் உருவாக்கவில்லை. 'கொலஜ் கனவடிவம்' (Collage Cubism) எனும் ஆக்கத்தையும் உருவாக்கினார்.

இவர் தன்னைப்பற்றிக் கூறும்போது "எனக்குத் தெரிந்தது ஓவியக் கலை மட்டுமல்ல. இன்னும் பல கலைகளைத் தெரியும். ஆனால் என் ஆற்றலை ஓவியத்தில் மட்டுமே தளராது செலுத்தி வெற்றி பெற்றேன் என்கிறார்.

இலட்ச ரூபாய் கொடுத்தாலும் வேண்டுகிறவர்களுக்கு வரைந்து கொடுக்காத ஓவிய மேதை பிக்காசோ தனது அன்பிற்குப் பாத்திரமானவர்களுக்குத் தனது படைப்புக்களைக் கொடுத்து மகிழ்ச்சிப் படுத்தினார். இவ்வாறு வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கலைக்கு அர்ப்பணித்துக்கொண்ட பிக்காசோ 1973இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈✈

மாணவர் கல்வி சிறக்க எமது வாழ்த்துக்கள்
நிரு கல்வி நிலையம்
மாணவ உலகின் வைர ஏணி
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

சிறுவர் அரங்கம் சிறக்க
சிறுவர் மனங்கள் சிறக்கும்.

## எனது பாடசாலை



எனது பாடசாலையின் பெயர் யா/ மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை ஆகும். இது மானிப்பாயல் அமைந்துள்ளது. இப்பாடசாலை பகவான் சத்திய சாயி பாபாவின் அருளால் நிறுவப்பட்டது. இப்பாடசாலையில் தரம் 1-6 வரை வகுப்புக்கள் உள்ளன. இப்பாடசாலையில் நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் சாதாரண கல்வியுடன் மனித மேம்பாட்டுக் கல்வியும் சேர்த்தே கற்பிக்கப் படுகின்றது. இலங்கையில் பாபாவின் அருளால் நிறுவப்பட்ட ஒரேயொரு பெருமைக்குரிய பாடசாலை ஆகும். நான் இப்பாடசாலையில் கல்வி கற்பதையிட்டு பெருமை அடைகின்றேன். எனவே பகவான் பாபாவிற்கு நன்றி கூறி இப்பாடசாலை மேலும சிறப்புற்று வளர்ச்சியடைய பகவானின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.


"ஜெய் சாயிராம்".

**ச. அங்கவன்**
தரம் 3,
யா/ சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்.




யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர் மன்ற நிகழ்வில பங்குபற்றிய நிகழ்வில் பங்குபற்றிய தரம் 2C மாணவர்களையும், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

## இலகு வடிவில் உருவங்கள் வரைவோம்





ப. சாகித்தியா
4 Plus,
உரும்பிராய் கிட்ஸ் பார்க்.

## எனது பாடசாலை



- எனது பாடசாலையின் பெயர யா/ மகாஜனக் கல்லூரி ஆகும்.
- தெல்லிப்பழை என்னும் அழகிய கிராமத்தில் அம்பனை என்ற ஊரிலே எனது பாடசாலை அமைந்துள்ளது.
- எனது பாடசாலையின் முதல்வராக திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் கடமையாற்றுகிறார்.
- பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் 1910ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- யாழ்ப்பாண மாவட்டத்திலே புகழ்பூத்த பாடசாலைகளில் எனது பாடசாலை தனக்கென தனியிடத்தைப் பிடித்துள்ளது.
- எனது பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் 13 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- எனது பாடசாலையில் எழுபது ஆசான்கள் மாணவர்களின் கல்விக்காக அரும்பணி ஆற்றுகின்றார்கள்.
- எனது பாடசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.
- பாடசாலையில் ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா, விளையாட் டுப் போட்டி என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.
- எனது பாடசாலை விளையாட்டிலும், தமிழ்த்தினப் போட்டியிலும் தேசிய மட்ட சாதனைகளைப் புரிந்து பெருமையுடன் மிளிர்ந்து கொண்டிருக்கிறது.
- எனது பாடசாலை பல துறைகளிலும் கல்விமான்களை உருவாக்கியதுடன் தனது நூற்றாண்டு விழாவை 2010ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

**சாகித்யா கிருபாகரன்**
தரம் 2,
யா / மகாஜனக் கல்லூரி.

## நுளம்பு



நுளம்பு ஒண்டு வந்துதாம்
கடிக்கக் கடிக்க வந்துதாம்
நுளம்பு வலை விடேல்லையாம்
எட்டி எட்டிப் பாத்துதாம்.



**ம. தமிழ்மாறன்**
தரம் 1
உடுவில் மகளிர் கல்லூரி.

## செய்தித்தாள்





1. நாம் முக்கியமான செய்திகளைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு கிடைக்கும் ஊடகங்களில் செய்தித் தாளும் ஒன்றாகும்.
2. செய்தித்தாள், செய்திகளை எழுத்துவடிவில் தருகிறது.
3. நாள்தோறும் வெளிவரும் பத்திரிகையை தினசரி நாளிதழ் என்று கூறலாம்.
4. வாரத்திற்கு ஒருமுறை வெளிவரும் செய்தித்தாளை வாரஇதழ், வாரப் பத்திரிகை என்று கூறலாம்.
5. காலாண்டுக்கு ஒருமுறை வெளிவரும் செய்தித்தாளை காலாண்டு இதழ் என்றும் கூறலாம்.
6. தினமும் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை நாம் கைக்கொள்ள வேண்டும்.
7. மாணவர்கள் அறிவை வளர்ப்பதற்கு செய்தித்தாள் துணை புரிகின்றது. அந்த வகையில் "வெற்றிமணி" இதழை மாணவர்கள் வாசித்தல் சிறந்தது.
8. பத்திரிகை வாசித்து பயன்பெறுவோம்.

**சி. சிவபுஜன்**
தரம் 3,
யா / யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## இலங்கை ரூபாய்களின் சின்னங்கள்





ப. லக்சியா
தரம் 2,
யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

## My School



1. The name of my school is Jaffna Hindu Primary School.
2. It is a Hindu School.
3. It is Primary School.
4. It is a Mixed School.
5. Mr. V. Gnanakanthan is our Principal.
6. We have classes from Grade one to Grade five.
7. The colour of our School is blue and white.
8. I like my School very much.

**Wijayavarman Larusan.**
Grade 4
Jaffna Hindu Primary.

## பூக்கள்





சின்னச்சின்னப் பூக்கள்
சிறந்த நல்ல பூக்கள்
மணம் வீசும் பூக்கள்
முத்துச் சிந்தும் பூக்கள்
முந்தித் தாவும் பூக்கள்.

ம. நிவேதா
தரம் 4,
யா / உடுவில் மகளிர் கல்லூரி.

## எனது பாடசாலை



1. எனது பாடசாலையின் பெயர் யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.
2. எனது பாடசாலை கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ளது.
3. எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு. வே. ஞானகாந்தன்.
4. எனது பாடசாலையின் மகுடவாசகம் "கற்று ஒழுகு காலம் அழியேல்" ஆகும்.
5. எனது பாடசாலையில் தரம் ஐந்து வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
6. நான் தரம் நான்கில் படிக்கிறேன்.
7. எனது வகுப்பாசிரியரின் பெயர் திரு. C. முத்துக்கிருஸ்ணன்.
8. எனது பாடசாலையில் பெரிய மூலிகைத் தோட்டம் அமைந்துள்ளது.
9. எனது பாடசாலையில் கணினி வசதிகளும் உண்டு.
10. எனது பாடசாலையின் அருகில் கொண்டலடி விநாயகர் அருள்புரிகிறார்.

**ஈ. அபிநயமேனன்**
தரம் 4,
யா / இந்து ஆரம்ப பாடசாலை.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து (ஹொலண்ட்) பயணத்தின் நிழல்கள்



வெற்றிமணி பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சிவகுமாரனும் அவரது பாரியாரும் இணையாசிரியர் வலன்ரீனா இளங்கோவனும்...





திருமதி வலன்ரீனா இளங்கோவன்

## ஓர் ஊரில் ஓர் புள்ளியில் மூன்று நாடுகள்

நெதார்லாந்தில் Maastricht என்ற இடத்திற்குச் சென்றால் Vaals என்கின்ற இடம் வரும்.அந்த இடத்தில்த்தான் நெதர் லாந்து, ஜெர்மனி பெல்ஜியம் என்கின்ற மூன்று நாடுகள் ஒரு புள்ளியில் சந்திக்கும் எல்லைகள் உள்ளது..

நெதர்லாந்தில் உயர்வு தாழ்வான நில அமைவிடம் இந்த லிம்பேர்க் மாநிலத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில்தான் அமைந்துள்ளது இது கண்களுக்கு அழகிய பசுமைக்காட்சி களாக அமைந்தன.

A. படத்தில் காட்டப்பட்ட பகுதி நெதர்லாந்துக்குரிய எல்லை யாகும். எல்லையின் தொடக்கம் வித்தியாசமான கற்கலி னால் அடுக்கப்பட்டு உள்ளது படத்தை அவதானிக்கவும்.

B. இது ஜெர்மனிக்குரிய எல்லைப்பகுதி.

C. இது பெல்ஜியத்துக்குரிய எல்லைப்பகுதி

கோபுரம் ஒன்று எல்லைக் கோடு அமைந்த பிரதேசத் துக்கு அருகில் அமைந்துள்ளது. இதில் ஏறி நின்று பார்த்தால் மூன்று நாடுகளினதும் அயல் இடங்களின் வனப்பும் கண்களுக்கு விருந்தாக அமையும்.

நெதர்லாந்து கடல் மட்டத்தைவிடப் பதிவான நில அமைப்புக் கொண்ட நாடு ஆகும். இந்த மூன்றுநாடுகள் சந்திக்கும் இந்தப்பிரதேசம்தான் நெதர்லாந்தில் அதி கூடிய உயரமான (322.5 மீற்றர்) உயரமான பிரதேசமாகும்.

ஆம்! ஓர் புள்ளியில் மூன்று நாடுகள், ஓர் ஊரில் ஒன்றாக அமைந்து அமைதியாக இருக்கிறது.

















## நெதர்லாந்தில் நடந்த உண்மைச் சம்பவம்

உயிரோடு வாழ்பவரைத் தத்தெடுப்பது வழக்கம். இங்கே யாரென்பதை அறியாமலே மரணித்த ஒரு இளை ஞனை தத்தெடுத்தாள் ஒரு இளம் மாது; வயது 16. பாட சாலையில் படிக்கும் காலத்தில் பத்திரிகையில் படித்த செய்தியொன்றே அவளை இந்த எண்ணத்திற்கு வரத் தூண்டியது இரண்டாவது உலக மகாயுத்தம் ஓய்ந்திருந்த நேரம் அப்போதுதான் கணக்கெடுப்பு நடந்துகொண்டிருந்தது. வாழ்பவரதும், வாழ்வை முடித்தவர்களதும் கணக்கேடு. இந்த நேரத்தில் அமெரிக்கப் படை வீரர்கள் தாம் போர் புரிந்த நாடுகளிலேயே பலர் மாண்டனர். அப்படியாக உயிர் நீத்தவர்களை ஓரிடத்தில் அடக்கம் செய்து அவர்களுக் கென ஒரு தனியான நினைவு மயானத்தையும் உருவாக் கினர். இப்படி ஒரு நினைவு இல்லம் நெதர்லாந்தில் (Netharlands American Cemetery -6269 Na Margraten) 1944 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி நிருவப்பட்டு ஆங்காங்கே புதைக்கப்பட்ட சடலங்களை ஒழுங்குபடுத்தி பெயரிட்டு பாதுகாத்தது.

அவர்களுக்கு எந்த உறவுக்காரரும் இல்லை.இந்த நிலையில் அவர்களது புதைகுழிகளை பூக்களால் மலரவைக்க பூமனம் கொண்டவர்கள் தத்தெடுக்கலா மென்ற அறிவிப்பே செய்தித்தாள்களை அந்த நேரத்தில் நிரப்பின. இதனைப் பார்த்த நெதர்லாந்து நாட்டு இளம் பெண் Jaegers என்பவள் போரில் மாண்ட 24 வயது இளை ஞன் ஒருவரது சடலத்தைத் தத்தெடுத்துக் கொண்டாள்.

அன்றிலிருந்து இன்றுவரை அந்த இளைஞனுக்கு அவன் மரணித்த திகதியில் மாதந்தோறும் பூவைத்து பூஜித்து வந்தாள். அன்று அவளுக்கு 15 வயது. ஆனால் அவள் பூஜிக்கும் அந்த வீரனுக்கு இன்றும் 24தான். அன்று பாடசாலையில் படிக்கும் காலத்தில் சக மாணவிகள் என்ன உனக்கு பதினாறு; அவனுக்கு 24 எங்கே பொருத்தம் என்று கிண்டல் செய்தால்; என்றும் அவருக்கு 24தான். ஆனால் என்க்கு, உனக்கு எல்லாம் அப்படியல்ல; பொறுத்திரு காலம் பதில் சொல்லும் என்பாள். அதுபோல் இன்று அவனைவிட அவள் முதியவளாகிவிட்டாள்.


வழமைபோல் ஒருநாள் பூக்களை எடுத்துக்கொண்டு அவன் துயிலும் இடத்திற்குச் சென்றாள். அங்கே என்ன அதிசயம். அவ ளுக்கு முன்பாகவே பூக்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.



Netharlands American Cemetery யில் வெற்றிமணி இணை ஆசிரியர் வலன்ரீனா இளங்கோவன்

59 வருடங்களாக எவரும் வந்து பூ வைக்காத அந்த இடத்தில் எப்படிப் பூ என ஆத்திரமும் அதி சயமும் அவள் மன தைக் கிளறியது. உடன் மயானப் பாது காப்பு அதிகாரியிடம் விசாரித்தாள். அவர்களோ "யார் பூ வைத்தது என்ற விப ரம் எமக்குத் தரமுடி யாது. விரும்பினால் உங்கள் விலாசத்தை அவர்களுக்கு அதாவது இப்போது புதிதாகப் பூ வைப்ப வர்களுக்குக் கொடுக்கின்றோம். அவர்கள் விரும்பினால் உங்களுடன் தொடர்பு கொள்வார்கள்" எனப் பதில் வந்தது.

அவளும் (Jaegers) தனது முகவரியை எழுதிக் கொடுத்துவிட்டு நடந்தாள். சரியாக ஒரு மாதத்தின் பின் அமெரிக்காவிலிருந்து ஒரு படமும் கடிதமும் வந்தது. படத்தில் ஒரு இளைஞனும் ஒரு பெண்ணும் இருந்தனர். கடிதத்தை வாசித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. தான் இவ்வளவு வருடங்களாக யார் என்று தெரியாமல் உருவங் காணாமல் நேசித்துப் பூவைத்த அந்த இளைஞனின் உருவப்படத்தை இப்போதுதான் முதற் தடவையாகக் காண்கின்றாள். அவள் மனதில் ஆவேசம். படத் தில் அவனுக்குப் பக்கத் தில் நிற்கும் பெண்ணை வெறுப்புடன் அடிக்கடி பார்த்தபடியே கடிதத்தை வாசித்து முடித்தாள்.



இப்போது யார் தனது தத்தெடுத்த இளைஞனு க்கு புதிதாகப் பூவைப்பது என்பது புரிந்துவிட்டது. அமெரிக்காவிலிருந்து அந்த இளைஞனின் முன்னாள் காதலியே அந்தப் பூக்களை வைப்பிக்கின்றாள். இவ்வளவு காலமும் தேடாத தன் காதலனை இப்போ தேட என்ன காரணம்?

காரணம் இன்று ஏற்பட்டுள்ள கணனி இணையத்தளம் தான். அதில் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் மாண்ட வர் களது பெயர், அவர்கள் புதைக்கப்பட்ட நாடு, இடம் என்பன தெளிவாக, விரிவாகப் பதியப்பட்டுள்ளன. இதன் பிரகாரமே அந்தக் காதலி தன் காதலனை 49 வருடங் களுக்குப் பின் கண்டுபிடித்தாள். இப்போது அந்தக் காதலிக்கு வயது 80 ஆகும். இவ்வளவு காலமும் பூவைத்த நெதர்லாந்துப் பெண்மணி தனக்குள்ளேயே கலங்கிக்கொண்டாள். அவளால் இந்தச் செயலை ஆத ரிக்கமுடியவில்லை. தான் இதுவரை நேசித்த அந்த ஒருவருக்குப் புதிதாக ஒருத்தி உரிமை கொண்டாடுவது தாங்கமுடியாத ஒரு சோகத்தைக் கொடுத்தது. அப்படியா னால் அவளுக்கு இறந்த உருவமே தெரியாத அந்த இளை ஞன் மீது காதலா. ஆம் இருக்கலாம். காதலுக்கு தமிழில் பல அர்த்தங்கள் உண்டு. காதலுக்கு உருவம் கிடையாது. காமத்துக்குத்தான் உருவம் தேவை. கடிதத்தொடர்பு அந்த இளைஞனின் காதலிக்கும் நெதர்லாந்துப் பெண் மணிக்கும் (Jaegers) தொடர்ந்தது. பின் தொலைபேசியில் கதைகள் வளர்ந்து, தற்போது அமெரிக்கப் பெண்மணி நெதர்லாந் துக்கே வந்துவிட்டாள்.

வந்ததும் இளங்காதலர்போல் அவர்கள் காதல் கதைகளையே கதைத்துக் கொள்கிறார்கள். இவளுக்கு அவன் இளம் பருவம் தெரியாது. எனவே அவற்றை எல்லாம் அமெரிக்கப் பெண்மணியிடம் கறந்துகொண்டு இன்பப் பால் பருகுகின்றாள். ஒன்றையே தினம் சிந்தித்து ஒரு மனமானால் காதல் மணம் வீசும். நல்லவற்றின் மீதான காதல்... உலகையும் உயிரையும் உய்யவைக்கும்.

தொடக்கத்தைவிட முடிவைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பௌதீக வினாத்தாளின் அமைப்பு 2

திரு. செ. சுகேந்திரன்
B.Sc (Special in Physics)

இவ்வினாத்தாளில் பல்தேர்வு வினாக்களை நோக்கு வோமாயின் அவை அறுபது வினாக்களைக் கொண்டதாகவும் 120 நிமிடங்களில் மாணவர்கள் சரியாக விடையளித்தால் அவர்களிற்கு 50 மதிப்பெண்கள் வழங்கப்படும். இந்த மதிப்பெண்ணை முழுமையாகப் பெரும்பாலான மாண வர்கள் பெற்றுக்கொள்வதில்லை என்பதைப் புள்ளி விபரங் கள் தெரிவிக்கின்றன. அதற்கு மாணவர்கள் மத்தியில் கூறப்படும் பிரதான கருத்து வினாத்தாளிற்கு வழங்கப்படும் நேரம் போதாமை என்பதேயாகும்.

இதற்கு அடிப்படைக் காரணமாக இப்பாடம் தொடர்பாக மாணவர்களின் பயிற்சியின்மையும் தெளிவின்மையும் அத்துடன் வினாவிற்கு விடையளிக்கும்போது சரியான திட்ட மிடல் இன்றி விடையளித்தல் அதாவது கடினமான வினாக் கள் எனக் கருதும் வினாக்களை அவர்களை அறியாமல் நீண்ட நேரத்தைச் செலவு செய்தல் என்பதேயாகும். அதாவது கவனத்தைத் திசைதிருப்பும் சொற்பிரயோகங்கள் மேலதிக தரவுகள் என்பவற்றை இனம்காணாது விடையளிக்கச் செல்கின்றமை. பொதுவாக எந்த ஆண்டுக்குரிய பல்தேர்வு வினாக்களை எடுத்துக் கருத்திற்கொண்டால் அவற்றில் 60% அல்லது அதற்கு மேலான வினாக்கள் நேரடிப் பிரயோகம் நேரடிப் பகுப்பாய்வாகவே அமையும். அவற்றுக்குச் சரியாக விடையளித்தாலே நாம் 60% ஆன புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒரு வினாத் தாளையும் தயாரிக்கும் ஆசிரியர் பெரும்பாலான மாண வர்கள் சித்தியடைய வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கின்றார்கள். எனவே வினாத்தாள் தொடர்பான பயத்தை அகற்றிக் கொள்ளவேண்டும். சிரித்த முகத்துடன் உற்சாகமாக வினாத்தாளை வாசித்து நம்பிக்கையாக விடையளித்தல் வேண்டும்.

சில கடினமான வினாக்கள் வினாத்தாளில் அமை யலாம். அவை வினாத்தாளில் பரவலாகக் காணப்பட லாம். அவற்றைக் கண்டு நாம் பயப்படலாகாது. அவற்றைத் தவிர்த்து இலகுவான வினாக்களிற்கு முதலில் விடை யளித்து முதல் சுற்றுக்கு வினாவை இறுதிவரை சென்று விடையளிக்க வேண்டும். இரண்டாவது சுற்றில் கடின மான வினாக்களிற்கு விடை அளிக்கலாம்.

கடந்தகால வினாக்களை நேரக் கணிப்புடன் விடையளித்து பயிற்சி எடுப்போமாயின் கடினமானவை எவை இலகுவானவை எவை என்பதை ஒவ்வொரு மாணவர்களும் தமது நிலைகளிற்கு ஏற்ப அறிந்து கொள்ளலாம். அந்த நிலைக்கு ஏற்ப மாணவர்கள் தமது பாடம் தொடர்பான புலமையினை அதிகரிக்கச் செய்யலாம். பொதுவாக சில வினாக்களில் இரண்டுவிதமாகத் தரவுகள் கொடுக்கப்படுகிறது. அதாவது படத்தில் தரவுகள் குறிக்கப்பட்டு வசன நடையில் அவற்றினை மீளவும் குறிப்பிட்டிருப்பார்கள்.

படத்தை அவதானித்தபின்பு வினாவை வாசிக்கும் போது வினாவை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். இதேபோன்று விடைகளை வாசித்து வினாவை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். எல்லாமே உங்களது கைகளிலே தான் உண்டு. எனவே அன்பார்ந்த மாணவர்களே அவசரப் பட்டு விடையளிப்பதைத் தவிர்த்து சிறப்பாகச் சிந்தித்து விடையளிப்பதன் மூலம் உச்ச மதிப்பெண்ணைப் பெற்றுக் கொள்ளுங்கள். பயிற்சிதான் நல்ல பலனைத் தரும். மீண்டும் அமைப்புக் கட்டுரை வினாவில் தொடர்வோம்.

# நம்பிக்கை தரும் வெற்றி



இரா. ஜெயக்குமார்
ஆசிரியர்
யா/நடேஸ்வராக் கல்லூரி.

யானையின் பலம் தும்பிக்கையிலே இருக்கிறது. மனிதனுடைய பலம் நம்பிக்கையிலே இருக்கிறது. "நம்பிக்கை உடைய ஒருவன் ஆர்வமுடைய 99 பேருக்குச் சமமான சக்தியைப் பெற்றவனாக இருக்கின்றான்" என்று ஜான் ஸ்டுவர்ட்டு மில் என்ற தத்துவஞானி குறிப்பிட்டார். 'நம்புகிறவனுக்கு எதுவுமே சாத்தியமாகிவிடுகிறது' என பைபிள் குறிப்பிடுகிறது. நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அதுவே நடக்கிறது. சாதனையாளர்கள் தமது செயல் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

மகிழ்ச்சி பணத்தினால் வருவதில்லை; வெற்றியினால் வருகிறது. வெற்றிபெற்ற மனிதர்களைப் பாருங்கள். அவர்கள் தாங்கள் எதிர்பார்க்கின்றபடி எதிர்காலத்தில் எல்லாமே நடக்கும் என்ற நம்பிக்கை உடையவர்கள். 'ஹாவார்ட்' பல்லைக்கழகம் ஒரு ஆய்வினை மேற் கொண்டது. ஆதன்முடிவில் வெற்றி பெற்றவர்களில் 85% இனர் ஆக்கபூர்வ மனோபாவம் பெற்றவர்கள் என்பது அறியப்பட்டுள்ளது. மனோபாவத்தை எமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்கலாம்.

உலகில் அன்றாடம் தற்கொலைகள் நிகழ்ந்துகொண் டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? 80% மனச் சோர்வும், 10% மனச்சிதைவும், 5% மூளை மழுங்குவதுமே தற்கொலைக்குக் காரணமென ஆய்வுகள் மூலம் அறியப் பட்டுள்ளது. எனவே தன்னம்பிக்கையே தற்கொலையைத் தவிர்க்கும் முக்கிய காரணி ஆகின்றது.

விதி ஒரு கதவைச் சாத்தும்போது நம்பிக்கை மற்றொரு கதவைத் திறக்கிறது. திறந்த கதவை நாடினால் வெற்றி பெறலாம். முடிவு பற்றிப் போதுமான சிரத்தை கொண்டாலே நீங்கள் அந்த முடிவை அடைவீர்கள். கியூபாவின் முன்னாள அதிபர் பிடல் காஸ்ட்ரோ கூறுவதைக் கவனியுங்கள். "நீங்கள் எத்தனை சின்னவர்கள் என்பதல்ல விஷயம். உங்கள் அபார நம்பிக்கையும் நடவடிக்கையும் தான் உங்கள் சக்தியைத் தீர்மானிக்கும்" என்றே அவர் குறிப்பிடுகிறார்.


சர்வதேச ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற ஒரு வெற்றி வீரரிடம் அவரது வெற்றிக்குக் காரணம் என்ன வென்று கேட்டார்கள். அதற்கு அவர் கூறிய பதில் என்ன தெரியுமா? "ஓடத்தயாராகும்போதே என்மனம் என்னையும் முந்திக்கொண்டு முதலிடத்துக்கு வந்துவிட்டது. இரண்டாவ தாக ஓடிவந்தது என் சரீரம் மட்டுமே" என்று அவர் குறிப்பிட்டார்.

பெற்றோர்கள் குழந்தைகளிடத்தில் தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும். குழந்தைகளின் ஒவ்வொரு சிறிய செய லுக்கும் அவர்களைப் பாராட்டுவதே நம்பிக்கையை வளர்க்கும். நம்பிக்கை உள்ள வரை வாழ்வில் வளம் இருக்கும்.




உலகிலே உயரமான ஆண்களைத்தான் இதுவரை கண்டிருப்பீர்கள். இதோ ஒரு பெண்! இந்தப் பெண்ணுக்கு கால் அளவு எடுப்பவர் கின்னஸ் உலக சாதனை அமைப்பின் உயர் அதிகாரி ஸ்டூவர்ட் கிளக்ஸ்டன். ரஷ்யாவைச் சேர்ந்த பெண்மணி ஸ்வெட்லானா பான்க்ரடோவா. உலகிலேயே நீண்ட கால்களை உடையவரான இவர், கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற உள்ளார். இவரது உயரம் 6 அடி 5 அங்குலம். கால்களின் நீளம் 4 அடி 4 அங்குலம்.

# எப்படி! எப்படி!! படிப்படியாய்!!!



சிப்பிக்குள் முத்து இருக்கும் அந்த முத்தை வைத்தவன் இறைவன் என்றால், இந்தப் போத்தலுள் இந்தப் பெரிய பாதணியை வைத்தவன் எவன்? அதே இறைவனால் படைக்கப்பட்ட மனிதனேதான்.

மிகவும் குறுகிய விட்டமுள்ள அதாவது துவாரமுள்ள (27 மி.மி) அந்தப் போத்தலின் வாயினூடாக இந்தப் பெரிய (அளவு 7) ஒட்டகம். அதுதான் அப்பெரிய பாதணி எப்படி நுழைந்தது. அதுதான் அதிசயம். ஆம்! அந்தச் சிறு துவாரமூடாகத் தோலை உள்ளே செலுத்தி போத்தல் வாயினில் தைக்கவேண்டிய பகுதியினைப் பிடித்துப், பிடித்து தைத்து முடிக்கப்பட்டது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு பாருங்கள் இந்தப் பாதணியே சான்று.



# இன்றைய சூழலும் இளந்தலைமுறையும்

பா. ஜெயரூபன்
ஆசிரியர்,
நாரந்தனை றோ. த. ம. வித்தியாலயம்.


இன்றைய உலகத்தின் முன்னேற்றம் மிகவும் வேகமானது. தொழில்நுட்ப வளர்ச்சியாலும் தொடர்பாட லின் பெருக்கத்தினாலும் இன்றைய உலகம் நவீன மயப்பட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்த முன் னேற்றம் பழமையான மதிப்பீடுகள், பழைய மரபுகள் என்பனவற்றில் உடையவையோ அல்லது மாற்றங் களையோ ஏற்படுத்துகின்றன. மாற்றங்கள் நன்மைகளை தரும் என்றால் அவை வரவேற்கத் தக்கவையே. ஆனால் இன்றைய இளம் தலைமுறை இந்த மாற்றங்களை உள்வாங்கி நல்ல வழியில் செல்கின்றதா என்று கேட்டால் திருப்தியான பதில் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

எந்த மாற்றமாக இருப்பினும் அடித்தளம் மாறாமல் இருக்கும். இளந் தலைமுறையைப் பொறுத்தமட்டில் கல்வி ஒன்றே அடித்தளமானது. கல்வி இல்லாத எந்த மேற்கட்டு மானமும் நிலைதிருப்பது இல்லை. ஆனால் இன்றைய இளந்தலைமுறை இதனை நன்கு விளங்கிக் கொண்டி ருக்கின்றதா என்பதை நோக்கவேண்டும். தேடல், ஆராய்ச்சி, வாசிப்பு, ஒற்றுமையுணர்வு, விசுவாசம் முதலான ஆக்கபூர்வமான செயற்பாடுகளையோ உணர்வு களையோ மாணவர்கள் தொலைக்காட்சியிலும் வேறு பல பொழுதுபோக்குகளிலும் தம் பொழுதைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, நல்ல புத்தகங்களை வாசித்தல், பெரியவர்களைத் தேடி அவர்களின் நல்ல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல், கலாசாரத்தை வளர்த்துக்கொள்ளல் முதலானவற்றை நடைமுறைப் படுத்துவதில் மாணவர் சமுதாயம் பின்நிற்பது கவலைக் குரியது. சொல்லப்போனால் பெற்றோர் தம் பிள்ளைகளின் மனம் போனபடி நடக்கவிடுகின்றார்களே தவிர, அவர் களுக்கு நல்ல வழிகாட்டுபவர்களாக இல்லை.

எனவே பெற்றோர், ஆசிரியர் முதலான பொறுப்பு வாய்ந்த சமூகங்கள் இளந்தலைமுறையினரை நல்ல வழி யில் செலுத்தவேண்டும். வாசிப்புப் பழக்கத்தை முன்னிறுத்த வேண்டும். தொலைக்காட்சி கலாசாரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லை எனில் ஒரு தலைமுறையை இரட்டுக்குள் தள்ளிய பாவம் எம்மைச் சூழ்ந்து விடும்.

உன்னிடம் வம்பளப்பவன் உன்னைப்பற்றியும் வம்பளப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மொழியும் பண்பாடும் 2

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மக்கள் குடியிருப்புக்கள் வளமான பிரதேசத்தில் அமையவேண்டும் என்ற கருத்து பரவலாக்கம் பெற்றுள்ளது. நீர்நிலைகளுக்கருகிலும் ஆற்றங்கரையோரத்திலும் கடற்கரையோரத்திலும் மக்கள் தங்கள் நிரந்தர உறைவிடங்களை அமைத்துக் கொள்ள விரும்பினர். ஊலகளாவிய நிலையில் நதிக்கரையில் நாகரிகமும் பண்பாடும் தோன்றி வளர்ந்துள்ளன. ஆனால் தமிழர் பண்பாட்டில் பிறிதொரு இடம் குடியிருப்புக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டு வருகிறது. இப்பாண்டு நிலையை மொழியும் ஆவணப்படுத்தி உள்ளது.

'கோவிலில்லா ஊரிலே குடியிருக்கவேண்டாம்' என்ற தொடர் மக்கள் குடியிருப்புக்கள் குடியிருப்புக்கள் கோவிலை அண்மித்திருப்பதே நன்று என்பதை நயமாக உணர்த்துகிறது. கோவில் மக்களை ஒன்றுகூடச் செய்யும் பொது இடமாக விளங்கியது. நூாள்தோறும் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வது மனதைப் பண்படுத்தும். கோவில் திருவிழாக்கள் மகிழ்வையும் பரவசத்தையும் ஏற்படுத்தும். அழகுணர்வையும் கலையுணர்வையும் வெளிப்படுத்த திருவிழாக் காலம் பயன்படும். வணிக நிலையில் வளர்ச்சி ஏற்படும். பண்டங்களின் விற்பனை பெருகும். நவீன நாகரிகச் செயற்பாடுகள் பரவலாக்கம் பெறும். கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகள் தூய்மையும் பொலிவும் பெறம். பண்பாட்டு நிலையில் ஆடை அணிதல், அழகுபடுத்தல் என்பன நடைபெறும்.

"கோயிற் பண்பாடு" என ஒரு பண்பாட்டுநிலை உருவாகியபோது மக்களின் மொழி வளமும் வளர்ச்சி பெறலாயிற்று. கோயிலைப் பற்றிய பாடல்கள் எழுந்தன. கோவில் வரலாறு 'தலபுராணம்' என்ற வடிவில் மொழி மூலம் பதிவு செய்யும் முறைமையும் உண்டாயிற்று. தேவாரங்கள் எனப் பக்தி நிலையில் பல பாடல்கள் பாடப்பட்டன. இறைவனின் அருட்சிறப்பும் தலச் சிறப்பும் கோலச் சிறப்பும் பாடல்களில் விரிவாகப் பாடப்பட்டன. அவ்வாறு பாடப்பட்டபோது மொழியூடாக ஒரு புதிய கற்கைநெறியும் கற்பித்தல் நெறியும் உருவாகின. இசையும் இசைக்கருவிகளும் இணைந்தன. இறைவனுக்கு ஆடலும் பாடலும் நிவேதனமாயின. கோயில் கலைப்பயிற்சிக் கூடமாக, மக்கள் வாழ்வியலில் வளம்தரும் உறைவிடமாகச் சிறப்புப் பெற்றது. சிற்பம், ஓவியம், புனைகலை, சமையற்கலை, கவின்கலை எனப் பல்வேறுபட்ட கலைகளையும் ஓரிடத்தில் செயற்படுத்தக்கோயிலின் விசாலமான அமைப்பும் பேருதவி புரிந்தது.

மொழியின் பயன்பாடு செயற்பாட்டு நிலையில் பக்தி உணர்வை எழுப்பியது. இன்னிசைப் பாடல்களும் தோத்திரங்களும் வாய்மொழியாகப் பேணப்பட்டன. புக்தியின் மொழி தமிழ் என்று விதந்து கூறும் நிலைக்குத் தமிழ்மொழி உயர் தனிச் சிறப்புப் பெற்றது. கூட்டு வழிபாட்டில் வட மொழிப் பயன்பாடுமிருந்தது. மொழியின் வளம் பேணப்பட்ட் அதேவேளையில் தமிழ்மொழியும் வடமொழியும் பக்திநிலையில் கோயில்களில் பயன்படுத்தப்பட்டபோது ஒரு நயத்தக்க நாகரிகம் இனங்காணப்பட்டது. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற மூத்தோரது கோட்பாட்டின் தன்மையை நன்குணர்ந்து செயலாற்றும் பொறுப்பு எமக்கு உண்டு.




ஹவாய் நாட்டில் நீருக்கடியில் வெடித்த எரிமலை கடலைத் தீயூட்டிய காட்சி. தீ பற்றிக் கொண்டால் நீரால் அணைக்கலாம். நீரே தீப் பிடித்தால் எதனால் அணைப்பது.




# இலங்கையில் முருகைக் கற்பாறைகள்

**திரு. சு. இளங்கோவன்**
ஆசிரியர்
யா/ யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

**முருகைக்கற் பாறைகளின் பரம்பல்**

இலங்கை வெப்ப வலயத்தில் உள்ள ஒரு தீவு. எனவே முருகைக்கற்பாறைகளின் விருத்திக்கு உகந்த சுற்றாடல் நிலைமைகள் இலங்கையின் கடல் எல்லையை சூழ உள்ள பிரதேசங்களில் காணக்கூடியதாக உள்ளது. இலங்கை முருகைக்கற்பாறைகள் பெருமளவில் காணப்படும் பிரதேசங்கள் பின்வருமாறு -

1. அம்பலாங்கொட - மாத்தறை கடற்கரையோரம்
2. மன்னார் - கற்பிட்டிக் கடற்கரைப் பிரதேசம்.
3. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, காரைநகர் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள தீவுகள்.
4. திருகோணமலை - நிலாவெளி, குச்சவெளி கடற்கரைப் பிரதேசம்.
5. தங்கல்ல - ரெக்காவ கடல் எல்லை.
6. பனிச்சங்கேணி - பணிச்சங்கேணி, வாகரை.
7. மட்டக்களப்பு பாசிக்குடா - கல்குடா பிரதேசம்.



**முருகைக்கற்பாறையின் முக்கியத்துவம்**

1. பல்வேறு மீனினங்கள், இறால், சிங்கி இறால் உட்பட பல்வேறுபட்ட நீர்வாழ் இனங்களுக்கு உணவு மற்றும் வாழிடம் வழங்கும் முக்கிய தொகுதியாகத் தொழிற்படுகின்றது.
2. மீன்பிடிப்பதற்குப் பொருத்தமான பிரதேசமாக இருக்கின்றது.
3. மீன் உட்பட பல்வேறு அங்கிகளின் இனப் பெருக்கத்திற்குப் பொருத்தமான சூழலாகக் காணப்படுகின்றது.
4. இயற்கை அழகைத் தருகின்றது.
5. கடல் அரிப்பைத் தடுக்கும் ஒரு இயற்கைக் காரணியாகத் தொழிற்படுகிறது.
6. சுற்றுலா மற்றும் அன்னிய செலாவணியைத் தேடித் தருகின்றது.
7. எதிர்கால ஆராய்ச்சிகளுக்கு நீர்வாழ் அங்கிகளின் கணக்கெடுப்புப் பிரதேசமாகப் பயன்படுத்தவும் உதவுகின்றது.

**இலங்கையில் முருகைக் கற்பாறைகளின் மூலம் மக்கள் பெறும் நன்மைகள்.**

இலங்கையில் முருகைக் கற்களின் மூலம் மனிதன் பெறும் பயன்கள் தனியே கடற்கரைப் பிரதேச மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. இது இலங்கை பூராகவும் உள்ள மக்களுக்கு பிரயோசனமானதாகும். முருகைக் கற்பாறை சார்ந்த சூழல் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்களிடையே முக்கியமானவை சில கீழே தரப்பட்டுள்ளன.

1) மீன், சிங்கி இறால், நண்டு, சிப்பி போன்ற உணவுக்குப் பொருத்தமான உயிர்களைப் பெற்றுக்கொள்ள உதவுகிறது.
2) மண்ணின் அமிலத் தன்மையைக் குறைக்கும் ஒரு இரசாயனப் பொருளாகப் பயன்படுகிறது.
3) ஏற்றுமதிக்கு அலங்கார மீன் மற்றும் கடற்பூக்கள் பெறல்.
4) கட்டட நிர்மாணத்திற்குத் தேவையான சுண்ணாம்பைப் பெற்றுக்கொள்ளல்.
5) லியுக்கேமியா மற்றும் புற்று நோயைக் கட்டுப்படுத்தும் மற்றும்பெரும்பாலான மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல்.



முருகைக் கற்பாறை சார்ந்த அங்கிகளின் மூலம் மனிதன் பெற்றுக்கொள்ளக் கூடிய பலா பலன்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கும். பரம்பரையாக இவ்வாறான பொருளாதார நன்மைகள் நம் நாட்டு மக்கள் பெற்று வருகின்றனர். ஆனால் அவை திட்டமொன்று இல்லாமலே பெறப்பட்டு வந்துள்ளன. அண்மையில் ஏற்பட்ட துரித சனத்தொகை அதிகரிப்பு காரணமாக முருகைக் கற்பாறை சார்ந்த தேவைகளும் உயர்ந் துள்ளன. இந்நிலையின்கீழ் மனிதன் இந்த அளப்பரிய வளங்களை அளவுக்கு அதிகமாக நுகரத் தொடங்கி யுள்ளான். இதன் காரணமாக இவ் வளங்ள் அழியும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. மேலும் கரையோரச் சூழல் மாசடைதல் காரணமாக (கழிவுகள் மற்றும் இரசா யனப் பொருட்கள் ஆறு, கடலுடன் கலப்பது) இச் சூழற் தொகுதி அழிவடைந்து வருகின்றது.

# பட்டாம்பூச்சிகள் இறுவட்டு, அபிநயப் பாடல் நூல் வெளியீடு



யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் சங்கீதத்துறை விரிவுரையாளர் திருமதி. விக்னேஸ்வரி நரேந்திராவின் தொகுப்பாக "பட்டாம் பூச்சிகள்" அபிநயப் பாடல் நூலும், இறுவட்டும் வெளி வந்திருக்கிறது.

"இசை எவரையும் இசைவிக்கும்" அந்த வகையில் சிறுவர்களுக்கான பாடல்களும், அவற்றை இசைவிக்கும் முறைகளையும் இந்தத் தொகுப்பில் திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா கலை இரசனையோடு சொல்லியிருக்கின்றார்.

இணுவில் பண்டிதர் அமரர் கார்த்திகேசு மற்றும் பல மூத்த கலைஞர்களினதும், இளைய கலைஞர்களினதும் பாடலைத் தொகுத்து புதுமையைப் புகுத்தியிருக்கின்றார் என்றால் மிகையாகாது. இந்த அபிநயப் பாடற் தொகுப்பு சிறுவர்களின் மனத்தில் பட்டாம்பூச்சியாய் சிறகடிக்கும் என்பதில் ஐயமில்லை.




திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா இலங்கையின் முன்னணி இசைக்கலைஞர்களில் ஒருவராகவும், யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கர்நாடக இசையைப் பயின்று இலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். அத்தோடு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பண்பாட்டியல் முதுகலைமாணிப் பட்டங்களையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானம் பறக்க எழும் வேகத்தில் ஒரு புதிய கடுகதிப் புகையிரதம்!!!



விமானம் பறப்பதற்குத் தயாராகும் வேகம் தெரியுமா? 300 கி.மீ முதல் 350 கி.மீ ஆகும். இந்த 300 கி.மீ வேகத்தில் ஒரு புகையிரதம் ஜேர்மனியில் தண்டவாளத்தில் பறக்கின்றது. அண்மையில் பிரங்பேட் நகரில் இருந்து கேர்லினுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதம் சரியாக 76 நிமிடங்களில் கேர்லினையடைகிறது. நெருநந் தெருக்களின் நெரிச்சலைக் குறைப்பதற்கான முயற்சியாகக் கருதப்படுகிறது இந்த அதிவேகம் கொண்ட புகையிரதத்தின் புதிய வரவு

## படங்களின் பதிவுகள்



யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மழலைகள் அமுதம் இறுவட்டு எதுவித தடைகளுமின்றி சிறப்புற வெளியிடப் பட்டமையை நினைவுகூர்ந்து காத்தவராயன் கூத்து காட்சிகள் எடுக்கப்பட்ட நவாலி களையோடை அம்மன் கோவிலில் கண்ணகி அம்மனுக்கு நன்றி செலுத்தும் முகமாக பாடசாலைச் சமூகத்தினரால் பொங்கல் பொங்கி நேர்த்திக்கடன் செலுத்தப்பட்டபோது அதிபர் திரு.வே. ஞானகாந்தன் அவர்கள் பொங்கலில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## "அங்கு எவரும் சப்பாத்து அணிவதில்லை"



**சிவஜனனி அரவிந்தன்**
B.Sc.Hons,Dip

ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு திறமை ஒழிந்து கிடக்கிறது. அதனை அவரவர் கண்டுகொள்ள வேண்டும்.

தன்னிடம் உள்ள தனித்துவத்தை ஒருவன் கண்டு கொண்டுவிட்டால் அவன் அக்கணமே வாழ்வில் பாதி வெற்றி அடைந்தவனாவான்.

ஒருவனது வெற்றிக்கு சந்தர்ப்பம் தானாக வருவது இல்லை. நாமாகத்தான் அச்சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொள்ளவேண்டும். சரி தானாகத்தான் ஒரு அதிஷ்டம் போல் ஒரு சந்தர்ப்பம் வருவதாக வைத்துக்கொண்டாலும் அதனைப் பயன்படுத்தும் திறமை இல்லை என்றால் அந்தச் சந்தர்ப்பத்தால் என்ன பயன். உழைப்பிலே ஒரு உச்சத்தை அடையவேண்டும் என்ற ஆசை ஒருவனுக்கு இருக்கவேண்டும்.

அதேபோல் கல்வியிலும் உச்சத்தை அடையவேண்டும் என்ற ஆசை இருக்கவேண்டும். எனவே உங்கள் இலட்சியத்தின் மீது ஆசை வைத்துக் கொள்ளுங்கள். பின் அதற்கான சந்தர்ப்பத்தை நீங்களாகவே உருவாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் அடைய எண்ணிய வெற்றிப் பாதையில் வரும் (Negatie thinking) எதிர்மறைகளை முன்னுக்கு நினைத்து உங்கள் இலட்சியத்தை பின்னே தள்ளாது அந்த இலட்சியத்தில் உள்ள உங்களுக்கு (Posivtive thinking) சார்பானவற்றை எடுத்துக்கொண்டு வீறு நடை போடுங்கள். எப்போதுமே Positive thinking வேண்டும்!


நேபயவளைந வாவைபெமைபை முன்னேற்றத்தைத் தடைசெய்யும். இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

நமது பாத அணிகளைத் தயாரிக்கும் பிரபலமான நிறுவனம் Bata வை எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த நிறுவனம் முதல் இலங்கையில் இதற்கான தொழிற்சாலையை நிறுவலாமா என ஆராய ஒருவரை அனுப்பியது. அவர் இலங்கையில் சென்று பார்த்துவிட்டு வந்து சொன்னார்.

அங்கு எவருமே சப்பாத்து அணிவது இல்லை. எனவே அங்கு இத்தொழிற்சாலை அமைப்பது நல்லதல்ல என தன் கருத்தைப் பரிந்துரைத்தார்.

ஆனால் எதிலுமே தன் இலட்சியததிற்குச் சார்பான சிந்தனை உடைய Tom Bata அச்செய்தியை எப்படிப் பார்த்தார் பாருங்கள்.



Tom Bata

அதாவது "இலங்கையில் எவருமே சப்பாத்து அணிவதில்லை" என்பதனை மாற்றி "இலங்கையில் எவரிடமும் சப்பாத்து இல்லை" என்று தனக்குச் சாதகமாச் சிந்தித்தார்.

உடனடியாகவே தனது தொழிற்சாலையை இலங்கையில் நிறுவினார். இப்படியாக பல நாடுகளில் நிறுவி இன்று மிகப் பெரிய செல்வந்தனாக வாழ்கிறார்.

Tom Bata's. Dad used to say" Opportunity is often what you make of circustances - not necessarily. what circumstance seems to offer" (from the book, Speak the language of Success)

எதனையும் தமக்குச் சாதகமாக எடுக்கப் பழகாதவர்கள் கூறுவார்கள் "எல்லோருமே பாட்டா முதலாளியாக வரலாமா" என்று. உண்மைதான் ஏன் அப்படி நினைப்பு வரவேண்டும். ஏன் அவரைவிட உயர்வாக ஏன் வரமுடியாது; வரலாம் என்ற முனைப்புடன் தொழிற்பட வேண்டும். இலட்சியம் பெரிதாகவும் அத்துடன் வாழ்வில் கிடைக்கும் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பாவிக்கும் திறமையும் இருந்தால் வெற்றி உங்கள் கையில்.





யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின்போது கல்லூரி அதிபர் திரு. ஆறு.திருமுருகன் அவர்களும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். கந்தசாமி அவர்களையும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. விக்னேஸ்வரன் அவர்களையும் மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் படங்களையும் காணலாம்.

## முயற்சி கொண்டு உன்னை உயர்த்திவிடு



இன்று மாணவ சமுதாயம் புத்தகம் படிப்பதுதான் கல்வி என்று எண்ணுவது சரியன்று. இன்று மாணவர் சாதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. மேல் நாடுகளில் சிறுவர்கள், மாணவர்கள் எத்தனையோ சாதனைகளைச் செய்கிறார்கள். அவர்களும் உங்களைப் போன்றோரே! எந் நேரமும் படிப்பு படிப்பு என்று இருப்பதால் மட்டும் தான் உங்கள் அறிவு வளர்கிறதா, ஒரு நாளும் இல்லை. வாசிப்பதனால் மாணவர் உயர்வடைவர். அதனால் தான் வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்று கூறுகிறார்கள்.

கவிதைகள், கட்டுரைகளை வாசியுங்கள். பாடசாலைகளில் நடைபெறும் ஏனைய செயற்பாடுகளில் நீங்கள் பங்குபற்றுங்கள். உங்களால் எழுதக்கூடிய ஆக்கங்களை நீங்கள் எழுதுங்கள். அப்போது உங்கள் அறிவும் ஆற்றலும் வளரும். இன்று சில பாடசாலை மாணவர்கள் தான் பத்திரிகைக்கு ஆக்கங்கள் எழுதுகிறார்கள். அவர்களும் உங்கள் வயதினரே. அவர்களால் முடிகிறது; ஏன் உங்களால் முடியாது? உங்களை நீங்களே உயர்த்தாது நீங்களே ஏன் தாழ்த்துகிறீர்கள். சில மாணவர் கூறுவர் ஆசிரியர் என்னைக் கேட்கவில்லை, அதனால் தான் பங்குபற்றவில்லை என்று.

உங்களால் எழுதப்பட்ட ஆக்கமோ, செய்யப்பட்ட பொருளோ அதனை அவர்களுக்குக் காட்டுங்கள். உங்களுக்கு அறிவும் ஆற்றலும் இருக்கும்போது சாதிப்பதற்கு ஏன் சிபாரிசு? முயற்சியும் தன்னம்பிக்கையும் இருக்கும்போது சாதிப்பதற்கு எங்கு தடை. நீங்கள் முயற்சி எடுத்து முன் வரும்போது தடை சொல்ல யாரால் முடியும். என்னால் சாதிக்க முடியும். நான் கவிதை எழுதுவேன். கட்டுரை எழுதுவேன். புதிய பொருட்களைச் செய்ய முயற்சிப்பேன் என்று உங்கள் மீது நீங்கள் முதலில் நம்பிக்கை வையுங்கள். யாருக்கும் தானாகவே எதுவும் வருவதில்லை. முயற்சி செய்தால் முடியும். ஒரு கவிதையை வாசியுங்கள். ஏன் என்னால் இதேபோல் எழுதமுடியாது என்று சிந்தியுங்கள். நீங்கள் அதேபோல் வேறு எழுத முயற்சியுங்கள். பிழைகள்வரும் அதனைத் திருத்துங்கள். முயற்சி கொண்டு முயற்சித்து முன்னேறுங்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

சுபா,
மானிப்பாய்.



## சிரிக்க மட்டும்!

ஒரு அமெரிக்கர், ஒரு இந்தியர், ஒரு ஜப்பானியர் ஆகிய மூவரும் ஒன்றாகப் பயணம் செய்துகொண்டு இருந்தார்கள். இரவு ஓர் இடத்தில் தங்கினார்கள். அவர்களிடம் இருந்த சாப்பாட்டை எடுத்தார்கள். ஒரே ஒரு ஆள் சாப்பிடத்தான் சாப்பாடு இருந்தது. யார் சாப்பிடுவது?

மூவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். "படுத்துத் தூங்கி யார் இனிய கனவைக் காணுகிறாரோ" அவர் சாப்பிடுவது என்று தீர்மானித்தார்கள். மூவரும் படுத்தார்கள், தூங்கினார்கள். ஒரு மணி நேரம் கழித்து எழுந்தார்கள். அவரவர் கண்ட இனிய கனவைச் சொன்னார்கள். அமெரிக்கர் சொன்னார் - என் கனவில் நடிகை மர்லின் மன்றோ வந்து முத்தம் கொடுத்தார்!

ஜப்பானியர் கூறினார் - கனவில் என் தொழிற்சாலைக்குப் போய் ஒரு கார் தயாரித்தேன். இந்தியர் சொன்னார் - என் கனவில் ஒரு கொள்ளைக்காரன் வந்தான். துப்பாக்கியைக் காட்டி சாப்பிடு! என்று மிரட்டினான். நான் பயந்துபோய், இருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டேன்.

ஆயிரம் தடவை அளவெடு, ஒரு தடவை வெட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அவலச் சுவையில் ஆற்றல் மிகப்பெற்ற உன்னத நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்



**வலன்ரீனா இளங்கோவன்** (B.A.Hons., Dip.in.Edu)

ஷேக்ஸ்பியர் ஸ்டார்ட் போர்டு எனும் இடத்தில் 1564ம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி பிறந்தார் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஷேக்ஸ்பியரின் தந்தை பெயர் ஜான் ஷேக்ஸ்பியர். தாயார் பெயர் மேரி ஆர்டன். இவரது குடும்பத்தவர்கள் யாருமே படிக்காதவர்கள். ஆனால் இவர் தந்தைக்கு உதவியாக சிறு வேலைகளைச் செய்துகொண்டு இலக்கணப் பள்ளியில் சேர்ந்து நன்றாகக் கற்றார். இலத்தீன் மொழியையும் நன்கு விரும்பிக் கற்றார்.



ஷேக்ஸ்பியர் பிறந்த இல்லம்

ஷேக்ஸ்பியர் 1582இல் அன்னி ஹேத்வே என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சூன்னா என்ற பெண் குழந்தையும், இரண்டு இரட்டைக் குழந்தைகளும் பிறந்தனர். ஷேக்ஸ்பியர் 1590 அளவில் இலண்டனில் தன் வாழ்வை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டார். முதன் முதலில் இவர் நடிகராகத் தான் மேடை ஏறினார். பின்னர் பல நாடகங்களை எழுதலானார்.

1595இல் முதன் முதலாக ரோமியோ ஜூலியட் நாடகத்தை எழுதினார். அது மக்களின் ஆதரவைப் பெற்றது. தொடர்ந்து மெர்செண்ட் ஒவ் வெனிஸ், ஜூலியர் சீசர், ஆஸ்யூ லைக்இட், ருவர்த் நைட், ஹேம்லெட், ஒத்தெல்லோ, கிங்லியர், மேக்பெத், அன்டனி கிளியோப்பட்ரா முதலானஅவரது நாடகங்கள் அவரை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

ஷேக்ஸ்பியரின் சொந்த நாடக அரங்கான குளோப் தியேட்டரில் (1599) இந்த நாடகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அரங்கேற்றப்பட்டன. இவர் இவ் அரங்கின் இல்லப் பொறுப்பாளராகவும், நடிகராகவும் அரங்கின் பல்திறன் கொண்ட மனிதராகவும் விளங்கினார். ஷேக்ஸ்பியர் மொத்தம் 34 நாடகங்களை எழுதியுள்ளார். இவை அனைத்தும் அவர் காலத்திலேயே புத்தகங்களாகப் பிரசுரிக்கப்பட்டன. அப் புத்தகங்களின் முதல் பதிப்புப் பிரதிகள் இன்றும் அமெரிக்காவில் கிடைக்கின்றன. ஆனால் ஒரு பிரதியின் விலை 25 லட்சம் டொலர்கள்.


இவர் தனது நாடகங்களிற்கான பொருளை நாவல்கள், பழைய நாடகங்கள், வரலாறுகள், புராணங்கள் மற்றும் பல்வேறு மூலகங்களில் இருந்து பெற்றுக்கொண்டார். இவரின் நாடகங்களை மகிழ்நெறிகள், அவலச் சுவைகள், வரலாறுகள் என வகைப்படுத்தலாம். ஷேக்ஸ்பியர் அவலச் சுவையில் தான் தனது உன்னத ஆற்றலை வெளிப்படுத்தி நின்றார்.




Othello நாடகத்தில் ஒரு காட்சி


1613ஆம் ஆண்டுக்குப் பின்பு ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எழுதவில்லை. ஆயினும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களின் இதயம் கவர்ந்த நாடக மன்னராகத் திகழ்ந்தார். ஆங்கில இலக்கியத்தின் ஈடு இணையற்ற நாடக ஆசிரியராக இன்றும் மதிக்கப்படும் ஷேக்ஸ்பியர் 1616ம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி அவருடைய பிறந்த நாளில் 52ஆவது வயதில் புகழுடம்பை எய்தினார்.

Shakespeare's Globe Theatre
குளோப் தியேட்டரில்





நாடக உள் அரங்கம்



நாடகம் ஆரம்பிப்பதற்கு முன் எரியும் விளக்குகளுடன் அரங்கம்

# தேசப்படங்கள் பற்றிய பொது விளக்கம்



**திருமதி. ர. சந்திரநாதன்**
B.A. Dip.in.Ed.
ஆசிரியை,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

முப்பரிமாண அமைப்பில் (நீள, அகல, உயரம்) காணப்படும் பௌதீக, பண்பாட்டு அம்சங்களை இரு பரிமாணங்களைக் கொண்ட (நீள, அலக) அமைப்பில் அடையாளங்கள், நிறங்கள், குறியீடுகள் மூலம் தட்டையான தாளில் வரைந்து காட்டுவதே தேசப்படமாகும். குறிப்பிட்ட பிரதேசத்தில் உண்மையான அளவை விடச் சிறியனவாகும்.

புராதன எகிப்திய காலத்தில் தமது சூழலை அடையாளங் காண்பதற்காகப் படங்கள் வரைந்திருந்தனர். காரணம் வருடா வருடம் நைல் நதிப் பெருக்கால் தமது காணிகள் அழிந்ததால் மீண்டும் அளக்க நேரிட்டது. இதனைவிடவும் மிகவும் பழமையானது மொசப்பொத்தேமியாவில் களிமண் தகட்டில் வரையப்பட்ட படமாகும். இதன் பின்னர் இரந்தேனிஸ் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு) புவியின் பருமனைக் கணிப்பிட்டு வரைந்தனர்.

அச்சுப் பொறிகள் கணிப்பிடும் சாதனங்கள், புதிய கருவிகள், கடதாசி இவற்றைவிட ஒளிப்படங்கள், கமரா அமைப்புக்கள் குறிப்பாக வானோக்கு ஒளிப்படக் கலை (Aerail maps) விருத்தியடைந்தமையால், இன்று புவியின் படங்கள் மட்டுமன்றி ஏனைய படங்களும் விருத்தியடைந்துள்ளன.

இன்றைய உலகில் அதன் முக்கியத்துவம், கட்டட அமைப்புக்கள், போக்குவரத்து, காணி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைப்புக்கள், விண்வெளிப் பயணம் ஆகியவற்றுக்கும் படங்கள் உதவியிருக்கும். புவியியலாளருக்கு மட்டுமன்றிப் பல்வேறு துறையினருக்கும் தேசப் படங்கள் முக்கியமாகும். தேசப்படங்களின் உயரங்கள், அதன் வேறு படங்களை சமவுயரக் கோடுகள் வாயிலாகவும் அடையாளங்களும் நிறங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

**1:50000 மெட்றிக் தேசப்பட விளக்கம்.**

புவியியல் துறையில் தேசப்படங்களும், வரைபடங்களும் முக்கியமான அம்சங்களாகும். தேசப்படம் என்பது அமைவிடம் ஒன்றைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் சர்வ அங்கீகாரம் பெற்ற ஊடகமாகும். முதன் முதலில் பெரிய பிரித்தானியாவில் ஓரங்குல (1:63360) நில அளவைப் படங்கள் 1746இல் வரையறுக்கப் பட்டன. இலங்கை நில அளவைத் திணைக்களம் 1800ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1907ஆம் ஆண்டு இலங்கையில் ஓரங்குலப் படங்கள் வரையும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இது 1924ம் ஆண்டு நிறைவேறியது. ஓரங்குலப் படம் எனும்போது அது வரையப்படும் தாளில் ஒரு அங்குலமான தூரம் நிலத்தின் ஒரு மைல் தூரத்தைக் குறிக்கும்.

**மெட்றிக் முறை**

1980ம் ஆண்டை அடுத்த தசாப்தத்தின் முற்பகுதியில் 1:50,000 பௌதீக உறுப்பு தேசப்படத் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது ஓரங்குலத் தேசப்படத்தை விடவும் பெரியது. இதன்படி தேசப்படம் ஒன்றில் 1cm தூரத்தைக் குறிக்கும். இலங்கையின் கூடிய நீளம் பருத்தித்துறை தொடக்கம் தேவுந்தர வரையாகும். இதன் தூரம் 447km. அகலம் கொழும்பு தொடக்கம் சங்கமன்கந்தை முனை வரையாகும். இது 219km.

**தேசப்படத்தை கூறுகளாகப் பிரித்து வரைதல்.**

இலங்கையைக் கூறுகளாகப் பிரித்து வரையும்போது நீள அகலங்கள் கொண்ட பிரிவுகளாக வகுத்துக் கொள்ளல் வேண்டும். இதன்படி 40km நீளமும், 25km அகலமும் கொண்ட 92 துணைப் பிரிவுகளாக வகுக்கப்பட்டு இவை சென்ரி மீற்றரில் வரையப்படுகின்றது. எனவே 1:50,000 எனும் மெட்றிக் அளவீட்டின்படி (அதாவது நிலத்தில் 1km தூரம் படத்தில் 1cm) 40cm x 2 = 80cm, 25km x 2 = 50cm. இதன்படி 1ம் பிரிவு மானிப்பாய் ஆகவும், 92ம் பிரிவு தங்காலை ஆகவும் உள்ளது.




யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் மனம் கவர் மாளிகை
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 2063



ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால் அதிகம் தீமை

# பஞ்சாங்கம்

க. ஈஸ்வரன் (ஆசிரியர்)
B.A (Hons) Dip in – Ed
யா / நாவற்குழி
ம.வித்தியாலயம்.



இந்து சமூகத்தில் நிலவிவரும் சடங்கு சம்பிரதாயங்கள், திருமணம் முதலிய நிகழ்வுகள் கால நேரம் பார்த்து சுபமுகூர்த்த வேளைகளிலேயே நடைபெறுவது தொன்றுதொட்டு நிலவிவரும் வழக்கமாகும். இவை இந்து சமூகத்தின் உயிர்நாடியாக விளங்கிவிடுகின்றன. இந்த உயிர்நாடியான விடயங்களை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி விளக்கிச் சமூகத்தைச் செம்மைப்படுத்தும் முயற்சியின் விளைவே பஞ்சாங்கம்.

குப்தப் பேரரசு காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர் என்பவர் வானசாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கோள்களின் நிலைகளைக் கண்டறிந்து உலகத்திலேயே முதன் முதலில் பஞ்சாங்கம் போடும் முறையைத் தோற்று வித்து வெளியிட்டார். இவருடன் கூடியிருந்து செயல்புரிந்தவராகிய வராக மிஹிராச்சாரியார் தான் - பிருக ஜாதகம் என்ற ஜோதிட சாஸ்த்திர நூலை வெளியிட்டார் எனப்படுகிறது. அந்த வகையில் நோக்கும் போது வானசாஸ்த்திரம், பஞ்சாங்கம் போன்ற துறைகளுக்கு ஆரியபட்டர் உண்மையிலே ஒரு வழிகாட்டியாக இருந்தார். இதனாலே தான் இந்தியா பறக்கவிட்ட முதல் விண்வெளிக்கப்பலுக்கு "ஆரியபட்டா" என்ற பெயர் சூட்டினார்கள் என்பர்.

இன்று இந்தியாவிலும் இலங்கையிலும் நூற்றுக் கணக்கான பஞ்சாங்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் மூன்று வகையில் பஞ்சாங்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவை **வாக்கிய பஞ்சாங்கம், சித்தாந்த பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம்** என்பவையாகும்.

வாக்கியம் பஞ்சாங்கம் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மட்டும் வெளியிடப்பட்டு விஷேடமாகத் தமிழர்களாலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கணிதத்தை எளிதில் செய்வதற்கு வாக்கியங்களின் உருவத்தில் பதங்களைத் தரும் வாக்கியகரணம் (வாக்கிய பஞ்சாத்தியாயீ) என்ற நூலை முதலூலாகக் கொண்டு செய்யப்படுவதால் இப்பஞ்சாங்கத்திற்கு வாக்கிய பஞ்சாங்கம் என்று பெயர் வழங்கப்பெறும். இதில் தமிழ் எழுத்துக்களுக்குக் குறிப்பிட்ட இலக்கங்களைக் குறிப்பதன் மூலம் இக்கணிப்பீடு சிறப்புறுகிறது. அந்த வகையில் அ - 1, ஆ - 2, இ - 3, ஈ - 4, உ - 5, ஊ - 6, எ - 7, ஏ - 8, ஐ - 9, ஒ, ஓ, ஔ - 0 என்பனவாகும். இவ்வுயிர் எழுத்துக்களைக் கொண்டே வாக்கியங்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக கைநீதி என்ற வாக்கியத்தை இலக்கத்தில் குறித்தால் (கை - 9, நீ - 4, தி - 3) இதைக் கடைசியில் இருந்தே எண்ணுதல் வேண்டும். அதாவது 349 என்பதைக் குறிக்கும். இதுவே வாக்கியம் எனப்படும்.

சோதிட சித்தாந்த நூல்களைப் பின்பற்றுவதாகக் கருதிக்கொண்டு சௌர சாந்திர மானத்தை முக்கியமாகப் பயன்படுத்திக் கொண்டு, மேற்படி சந்திரமானத்தை உபயோகிக்கும் ஆந்திரர், கன்னடியர், மகா ராஷ்டிரர் முதலியோருக்குத் தேவையான விஷயங்களை பிரதானமாகக் கூறும் பஞ்சாங்கம் சித்தாந்த பஞ்சாங்கமாகும்.

ஆகாயத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையை அப்படியே ஸ்புடத்தில் பிரதிபலிக்கச் செய்து அதற்கேற்பத் திதி முதலிய மற்றைய விடயங்களைத் தரும் பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எனப்படும். இதற்குத் தேவையான துல்லியமான கிரகஸ்புடங்களை "நாட்டிக்கல் ஆல்மனாக்" (Nautical Almanac) முதலிய மேனாட்டுப் பஞ்சாங்கங்களிலிருந்து இந்தியாவில் வேண்டிய மத்திய ஸ்தானத்திற்கு அவற்றைத் தேசாந்திர சம்ஸ்காரம் செய்து கொண்டு இத்திருக்கணித பஞ்சாங்கங்களைக் கணிப்பீடு செய்வர்.

பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்கள் கொண்டது என்பது பொருள். வாரம், அல்லது கிழமை, திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து அங்கங்களையும் முக்கியவுறுப்புக்களாகவுடையது. பஞ்சாங்கம் தொடக்க காலத்தில் மூன்று அங்கங்கள் அதாவது திதி, வாரம், நட்சத்திரம் என்பன்வே முக்கியத்துவம் உடையனவாகக் காணப்பட்டன. இதனைத் "திரியங்கம்" என அழைத்தனர். பிற்பட்ட காலங்களிலேயே கரணம், யோகம் என்பன சேர்க்கப்பட்டுப் பஞ்சாங்கமானது.

ஐந்து அங்கங்களில் வாரம் என்ற கிழமை நாளுக்கு ஒன்றாக அடுத்து அடுத்து வருமாகலின் அது முதலில் இடம்பெறும். அவ்வங்கம் இதிகாச காலத்திற்குப் பின்னரே தோன்றியது என்பர். அதற்கு முன் கிழமை என்பது இந்தியாவிலோ இலங்கையிலோ வழக்கிலில்லை.

வாரத்திற்கு அடுத்தாற் போல் பஞ்சாங்கத்தில் இடம்பெறுவது திதியாகும். திதிகள் வளர்பிறையாகிய சுக்லபட்சத்தில் பிரதமை முதல் பூரணை ஈறாகப் பதினைந்தும் தேய்பிறையாகிய கிருஷ்ண பட்சத்தில் பிரதமை முதல் அமாவாசை வரை பதினைந்து மாக முப்பது திதிகள் கூறப்படுகின்றன. திதி என்பது வானவீதியில் சூரியன் நிற்குமிடத்திலிருந்து சந்திரன் நிற்கும் இடத்தின் தூரத்தைக் குறிக்கும். அத்தூரத்தில் ஒவ்வொரு பன்னிரண்டு பாகைக்கும் ஒருதிதி வீதம் கணக்கிடப்படும். பஞ்சாங்கத்தில் போடப்படும் நாழிகை குறிப்பிட்ட திதியில் முடிவாகும்.

திதிக்கு அடுத்தபடியில் இடம் பெறுவது நட்சத்திரமாகும். இது சந்திரனைக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது. சந்திரஸ்புடத்தை வைத்துப் பதின்மூன்று பாகை இருபது கலைக்கு ஒன்றாக அஸ்வினி முதல் ரேவதி ஈறாகவுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களும் கணக்கிடப்படும். பஞ்சாங்கத்தில் போடப்படும் நாழிகை குறிப்பிட்ட நட்சத்திரத்தின் முடிவுக்காலம் ஆகும்.

நட்சத்திரத்திற்கு அடுத்து யோகம் இடம்பெறுகின்றது. யோகம் என்ற சொல்லுக்குச் சேர்க்கை என்பது பொருள். சூரியஸ்புடத்தையும் சந்திரஸ்புடத்தையும் கூட்டிப்பதின் மூன்று பாகை இருபது கலைக்கு ஒன்றாக விஷ்கம்பம் முதல் வைருதி ஈறாகவுள்ள இருபத்தியேழு (27) யோகங்களும் கணக்கிடப்படும். பஞ்சாங்கத்திற் குறிக்கப் பெறுவது குறிப்பிட்ட யோகத்தில் முடிவுக்காலம் ஐந்து அங்கங்களிலும் யோகமே காலத்தில் மிகக் கடைசியில் உண்டானது.

ஐந்தாவதாகக் குறிக்கப்படும் அங்கம் கரணம் ஆகும். திதியை அனுசரித்துத் திதியின் முதற்பாதிக்கு ஒரு கரணமும் இரண்டாம் பாதிக்கு அடுத்த கரணமுமாக முப்பது (30) திதிகளும் அறுபது (60) கரணங்களும் வரும். எல்லாமாகப் பதினொரு கரணங்கள் உள்ளன. பஞ்சாங்கத்தில் குறிக்கப்பெற்றிருப்பது அன்று முதலில் முடிவுபெறும் கரணமும் அதன் நாழிகையுமாகும்.

தினந்தோறும் தினசுத்தியை பஞ்சாங்கத்திலிருந்து இவ்வைந்து அங்கங்களுடன் அறிந்து கொள்வோர் ஆயுளையும், செல்வத்தையும் பாவநிவிர்த்தியையும், ஆரோக்கியத்தையும் காரிய சித்தியையும் அடைவர் என்று சாத்திரங்கள் கூறும்.

## நெஞ்சு பொறுக்குதில்லையே!




விநாயகர் சதுர்த்தி. இத்தினத்தில் விநாயகர் பெருமானது அழகிய திருவுருவங்களை மண்ணில் செய்து பின் வழிபாட்டுடன் எடுத்து வந்து கடலில் கரைப்பது இந்தியாவில் வழக்கம். அவ்வாறு கரைக்கப்படும் ஆயிரக்கணக்கான திருவுருவங்கள் மறுநாள் கரையாமல் கரையொதுங்கியிருக்கும். அவற்றை புல்டோசர்கள் குப்பைகளுடன் குப்பையாகத் தள்ளி துப்புரவு செய்கின்றன.

நேற்று இறைவன்! இன்று குப்பை!! என்றால் நெஞ்சு பொறுக்குதில்லையே. இது தெய்வ நிந்தனை அல்லவா? அழ கிய சிலைகள் அழியாதிருந்தால் பெருமை. அழுக்காகிப் போனால்? சிறுமை! கலை, தெய்வீகம். அதனைப் பேணுவது நம் கடன்.

ஆலயங்களிலே அள்ளி வீசுகின்ற பிரசுரங்கள்கூட அங்கு பலரது இருக்கையாகவும், குடையாகவும், கைக் குட்டையாகவும் மாறுவதைக் காணலாம். இடமறிந்து, குணமறிந்து தொண்டும் பணிகளும் தொடரவேண்டும். குளிக்கப்போய் சேறுபூசுவதாக அமைதல் கூடாது. தெய்வ நம்பிக்கை வேண்டும். அதனை மாசுபடுத்தாது போற்றிப் பேணவும் வேண்டும். வழிபாடு உள்ளத்தையும், உலகையும் அழகுபடுத்துவதாக அமையவேண்டும்.

## சமயம் ஒரு விஞ்ஞானம்



- சோ. கார்த்திக், B.A. Hons.

இந்து சமயத்திலே காணப்படும் சமயச் சடங்குகள், சமய வழிபாட்டு முறைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதி பலனைத் தரவல்லது. கனவு களினை அகக் கண்ணால் பார்ப்பது ஆன்மீகம்; புறக்கண்ணால் பார்ப்பது விஞ்ஞானம். ஆகவே பலன்கள் ஒன்று; அவற்றின் பார்வைகள் தான் வேறாகின்றது. இந்து சமூகத்தில் கோயில் வழிபாடு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. கோயிலுக்குச் செல்வோர் குளித்து தோய்த்து உலர்ந்த ஆடைகளினை அணிந்து, பாதணிகள் இல்லாமல் செல்லவேண்டும் என்கின்றது சமயம். ஏனெனில் மனித உடலில் எல்லாப் பகுதிகளையும் ஒரே இடம் கால் பாதமாகும். இதனாலே கால் தரையில் படும் போது உடலில் எல்லாப் பாகங்களும் தொழிற்படுகின்றது. இதனால் நரம்புத்தளர்ச்சி, வாதம், கால்பருமன் என்பன குறைவடைகின்றன.

மேலும் விரதம் அனுஷ்டிப்பது ஒருவழிபாடாகும். விரதம் இருப்பதால் உடல் கொழுப்பு பெருமளவு குறைவடைந்து உடல் ஆரோக்கியம், இளமை, வியாதி குறைவு ஏற்படும். இதனாலே தான் "ஒரு வேளை உண்பவன் யோகி, மூன்று வேளை உண்பவன் துரோகி" எனச் சான்றோர் கூறு வர். விரதமானது உடல், உள ஆரோக்கிய சம்பந்தமானது. கூடுதலான விரதம் அனுஷ்டிப்போர் உடற்புண், உடற் சோர்வு ஆகிய வியாதிகளுக்கு உட்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் அவர்களிடையே காணப்படும் மனக் கவலைகளும் மன அழுத்தங்களுமேயாகும். இங்கு பட்டினி வேறு, விரதம் வேறு. பட்டினி இருப்பவன் நோய்களுக்குள்ளாகின்றான்; விரதம் இருப்பவன் உடலாரோக்கியமாயிருக்கிறான். இதனால்தான் விரதம் முக்கியத்துவப்படுகின்றது.

இங்கு ஆலய வழிபாட்டில் பெண்கள் பஞ்சாங்க நமஸ் காரம் செய்வர். இங்கு 3, 5, 7, 9, 12 எனப்பல தடவைகள் கூறப்படுகிறது. இவைகளை பெண்கள் பின்பற்றும்போது இடுப்பு மூட்டுக்களின் அசைவுகள் சீராகத் தொழிற்படுவ தால் சீரான மாதவிடாய்ச் சக்கரம், சுகப்பிரசவம், உடல் அழகு என்பன ஏற்படுகின்றது. இதற்காகவே பெண்களுக்கென அடியடித்தல், கற்பூரச்சட்டி, பால்குடம் சுமத்தல் ஆகிய வழி பாடுகள் இவர்களின் நன்மைக்காகவே கூறப்படுகின்றன.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என நன்னூலார் கூறியுள்ளார். எனவே அர்த்தமுள்ள வழிபாட்டு முறையை பின்பற்றுவதும் அர்த்தமற்ற வழிபாட்டு முறையை விலக்குவதும் தவறாக மாட்டாது. மூடநம்பிக்கையை ஒழிப்போம், தன்னம்பிகையை வளர்ப்போம்.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழ்
சிவத்தமிழ்
அறிவியலலோடு ஒட்டிய ஆன்மீகக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.
M. K. S. Sivakumaran
Bost Box 2765,
58477 Ludenschied,
Germany.
மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com.
00492351 458862



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் அரசின் சமூக நிர்வாக உயரதிகாரியாக

## செல்வி வித்யா பாக்கியநாதன்




யாழ்ப்பாணத்தில் கல்விகற்ற நம்மவர்கள் இங்கு ஏற்பட் நெருக்கடியால் படித்தபடிப்பை இடைநிறுத்தியும், படித்து முடித்தவர்கள் பயனை இழந்தும், புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றார்கள். சென்றதும் அங்கு நகர அலுவலகத்தில் மொழி தெரியாது மனம்குனிய ஒருவித விரக்தியுடன் நின்றார்கள். ஆனால் தமது வாரிசுகளை எண்ணி நம்பிக்கையுடன் உழைத்தனர். அதனால் இன்று அறுவடைக்காலம். அவர்கள் தலைகுனிந்து நின்ற இடங்களில் எல்லாம் நம் வாரிசுகள் தலைநிமிர்ந்து நிற்பது கண்டு மகிழ்கின்றார்கள்.

யாருடைய பிள்ளையாக இருந்தாலும் அவர்களைப் பார்க்கையில் எமக்குள் ஒரு இறுமாப்பு வந்து செல்வது தெரிகின்றது. அதனை எமக்களித்த இளம் சந்ததியினரை வாழ்த்தாமல் இருக்கமுடியாது.


இந்த வகையில்... யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் அரச சமூக நிர்வாக உயரதியாரி (Public Administration Officer) என்ற உயர் பதவியை 1.3.2009ல் ஏற்று, டோற்மூண்ட் நகரசபைப் பணிமனையில் செல்வி வித்தியா பாக்கியநாதன் பணியாற்றுகின்றார். 2005ல் அரசாங்க நிர்வாக அதிகாரியாகப் பதவியேற்ற இவர் பங்குனி 2009 முதல் stadtoberinspektorin என்ற உயர் பதவியை ஏற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு ஜேர்மனியில் டோட்மூண்ட் நகரில் வசிக்கும் கலை விளக்கு திரு. சு. பாக்கியநாதன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்) விக்னா பாக்கியநாதன் (வேலணை) தம்பதிகளின் புதல்வி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. செல்வி வித்யாவை யாழ் வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.

# 150 நாட்டுக் கொடிகளை 145 செக்கனில் இனங்காட்டிய நான்கு வயதுச் சிறுவன்! தமிழனின் ஆற்றல் கொடி உயரப் பறக்கிறது!



தமிழ்ச்சிறுவன் ஒருவனின் சாதனை உலகத்தை வியக்க வைத்துள்ளது. சிறுவன் திருவரங்கன் அலெக்ஸ் சபாரத்தினம் அவர்கள் கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் வாழ்ந்து வருகிறார். இவருக்கு வயது நான்கே நான்கு தான். இவர் செய்த சாதனையோ நான்கு பக்கமும் வியக்கும் வண்ணம் உள்ளது. 143 செக்கனில் 150 நாடுகளின் கொடிகளை இனங்கண்டு தமிழினத்தின் பெருமையையும் மகிமையையும் உயர்த்தியுள்ளார். இவருடைய ஞாபக சக்தியைக் கண்டு நடுவர்களே அதிர்ந்துபோனார்கள். தமிழர் தகவல் - கனடா இவரது மதி நுட்பத்தைப் பாராட்டி கனடாவில் கௌரவித்துள்ளது.



# யேர்மனியில் கல்வியில் கலக்கும் நம் மாணவர்கள்



செல்வன் துரைரத்தினம் திலக்ஷன்



செல்வி நிரோஷா துரைரத்தினம்

யேர்மனியில் லுடின்சைட் நகரில் அமைந்துள்ள Zeppelin-gymna sium Lüdenscheid பாடசாலையைச் சேர்ந்த எம் தாயகத்தின் வாரிசு மாணவன் துரைரத்தினம் திலக்ஷன் 13ம் வகுப்பு இறுதிப் பரீட்சையில் 1.5 சிறப்புப் புள்ளிகளைப்பெற்று பாடசாலையில் இரண்டாவது இடத் தில் திகழ்கின்றார். இவர் Mathe matik Olympiade போட்டியிலும் பங்கு கொண்டவர்.

Gescheichts Wettbewerb மூன்று வருடங்களுக்கு முன் யோ்மன் தழுவிய போட்டியில் நான்காம் இடத்தைப் பெற்று நம்மை மகிழ்வித்தார்.

இவர் தமிழிலும் லூடின்சைட் தமிழாலயத்தில் 10(2) ஐ சிறப்பாக நிறைவு செய்த மாணவன். இவரது சகோதரி நிரோஷா துரைரத்தினம் அவர்கள் 1.8 சிறப்புப் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தை ஆசிரியர் தில்லையம்பலம் துரைரட்ணம் யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவிலையும், தாயார் நிரஞ்ஜினி நல்லூரையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

கல்வியில் சிறந்து தரணியில் தமிழன் புகழ் ஓங்க எம் மாணவர்களை வெற்றிமணி வாழ்த்துகின்றது.

### செல்வன் யசோதரன் சாஹிராம்

யோ்மனியில் அல்ரனா நகரில் அமைந்துள்ள Richard- schirr mann Realsc hule பாடசாலையைச் சேர்ந்த எம் தாயகத்தின் வாரீசு மாணவன் செல்வன் யசோதரன் சாஹிராம் அக்கல்லூரியின் சரித்திரத்தில் ஒரு மைல் கல்லை நாட்டியுள்ளார்.

பத்தாம் வகுப்பு இறுதிப்பரீட்சையில் 64 மாணவர்களில் முதலாவது மாணவனாக யசோதரன் சாஹிராம் 1.0 சிறப்புப் புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளார். இச்சாதனையானது அக்கல்லூரியின் சரித்திரத்தில் இதுவரை நிகழாத ஒன்று.



எமது மண்ணின் வாரிசு இப்பெரும் சாதனை படைத்தது எமது இனத்திற்கு பெருமை சேர்க்கின்றது. சிறப்புக்குரிய இவரது சான்றி தழை அக் கல்லூரியின் அதிபர் வடமாகாண கல்வி மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தின் மூலம் இப்படியாக ஒரு சிறப்பு வாய்ந்த மாணவன் தமது கல்லூரியில் கல்வி பயில்கின்றான் என்ற செய்தியினைத் தெரியப்படுத்தியுள்ளார். இம்மாணவனின் பொழுதுபோக்கு அம்சமாக உதைபந்தாட்டம் திகழ்கின்றது.

இவரது தந்தையார் ஆசிரியர் நாகமுத்து யசோதரன் அவர்கள், தாயகத்தில் நயினாதீவினையும், தாயார் ஞானரஞ்சிதம் புங்குடுதீவினையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது சாதனை மென்மேலும் பெருகி, எமது மண்ணின் பெருமை உலகறிய வெற்றிமணி வாழ்த்துகின்றது.

# ஈழத் தமிழ் மாணவிக்கு ஜேர்மன் அரசுத் தலைவர் விருது

## விஞ்ஞானத்தில் புதிய கண்டுபிடிப்பு



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அன்று நட்ட மரங்கள் இன்று பூத்துக் காய்த்து கனிய ஆரம்பித்துள்ளன. ஜேர்மனியில் இரசாய தொழில்நுட்பவியல் துறையில் புதிய கண்டுபிடிப்பு ஒன்றைச் செய்த ஈழத் தமிழ் மாணவி லோகநாதன் சிவராதை ஜேர்மன் அரசுத் தலைவர் விருதான தங்கப்பதக்கத்தையும் 2500 யூரோ பரிசுத் தொகையையும் பெற்றுக் கொண்டார். அவர் மேற்படிப்பை மேற்கொள்வதற்கான செலவையும் ஜேர்மனி அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி லோகநாதன் தம்பதிகளின் புதல்வியாவார். சிவராதை பல அறிவியல் வெற்றிகள் பெற்றிட வெற்றிமணி அவரை வாழ்த்துகின்றது.

# தமிழ்ச் சிறுமிக்கு பிரித்தானிய பிரதமர் இல்லத்தில் தேனீர் விருந்து



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையிலிருந்து பிரித்தானியாவுக்குச் சென்ற சிறுமி மௌலியா 4 ஆண்டுகளில் ஆங்கிலப் புலமை பெற்று பிரித்தானிய தரத்தையும் விஞ்சி Danerous New World என்ற முதலாவது சிறுவர் நாவலை எழுதி கல்வித் திணைக்களத்தின் மூலம் வெளியிட்டார். இதனை அறிந்த பிரதமர் தனது வாசஸ்தலத்திற்கு மௌலியாவை வரவழைத்து தேனீர் விருந்தொன்றை அளித்து பிரித்தானிய பாராளுமன்றத்தையும், அதிதி அந்தஸ்த்துடன் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பையும் அளித்து கௌரவித்தார்.

மாணவர்கள் கல்வியில் ஓங்க எமது வாழ்த்துக்கள்

ஜேர்மனியிலிருந்து

சிவசாமிக் குருக்கள் ஜெயந்திநாதசர்மா

Robert Koch Str 5
58239 Schwerte,
Tel : 023049109445 - 01772016941



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். [முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி]

## ஒலிம்பிக்கும் பெண்களும்
### அதிர்ச்சிதரும் சில தகவல்கள்



கி.மு 776 ஒலிம்பிக்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 1170 வருடங்கள் பெண்களை பார்வையாளர்களாகக்கூட அனுமதிக்கவில்லை. போட்டிகளைப் பார்க்கும் ஆர்வத்தில் பலர் ஆண்கள் வேடமிட்டு உள்ளே நுழைந்தனர். இப்படிப்பட்ட வேடதாரிகள் மாட்டிக்கொண்டால் இவர்களை மலை உச்சிக்கே இழுத்துச் சென்று அங்கிருந்து கீழே தள்ளி சாகடிப்பார்களாம்.

1900ம் ஆண்டில் டெனில் கோல்வ், வில்வித்தை ஆகிய மூன்று போட்டிகளில் மட்டும் பெண்களுக்குத் தனிப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. 1932ம் ஆண்டு ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர் அமெரிக்க வீராங்களை ஸ்ரெலா வால்ஸ் 48 வருடங்களுக்குப் பிறகு 1980ம் ஆண்டு ஒரு தகராறில் சுடப்பட்டு இறந்தால் ஸ்ரெலா. வைத்தியர்கள் பிரேத பரிசோதனை நடத்தியபோதுதான் ஒரு உண்மை தெரிந்தது. அவர் பெண் இல்லை ஆண் என்று.

1928ம் ஆண்டுதான் பெண்களுக்கான ஓட்டப் போட்டிகள் முதலில் நடந்தன. 100மீற்றர், 400மீற்றர், 800 மீற்றர் போட்டிகளில் ஓடிய வீராங்கனைகள் போட்டித் தூரத்தை எட்டமுடியாது மயங்கி விழுந்துவிட, அதற்குப் பின் அந்தப் போட்டிகள் தடைசெய்யப்பட்டன. திரும்பவும் 1960ம் ஆண்டுதான் மீண்டும் இந்தப் போட்டிகள் சேர்க்கப்பட்டன.



2008ம் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்ட கூடைப்பந் தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று சம்பிய னாகிய யாழ் திருக்குடும்ப கன்னியர்மட அணியின ரையும், இரண்டாமிடத்தைப் பெற்ற யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியினரையும் படத்தில் காணலாம்.

## பாரம்பரிய விளையாட்டுக்கள்



திரு. I. சசிகீகுமார்
Dip. in. Physical Edu.

☛ **பாரம்பரியம் என்றால் என்ன?**

பாரம்பரியம் என்பது ஓர் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் என்பவற்றைப் பின்பற்றி நடத்தல் ஆகும்.

☛ **பாரம்பரிய விளையாட்டுக்கள் என்றால் என்ன?**

ஓர் பிரதேசத்து மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி அவர்களினது உடல் நிலைகளைத் தனிமைப்படுத்த அந்தப் பிரதேசத்தினது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப விளையாடப்பட்ட விளையாட்டுக்கள் பாரம்பரிய விளையாட்டுக்களாகும்.

☛ **பாரம்பரிய விளையாட்டுக்களின் முக்கியத்துவங்கள்**

1. அந்தப் பிரதேசத்து மக்களினது பண்பாடுகள் வெளிப்படுத்தப்படும்.
2. பிரதேச ஒற்றுமை வளர்ச்சியடையும்.
3. கூட்டுக் குடும்ப உறவு ஏற்படும்.
4. மகிழ்ச்சி, உடல் வலிமை ஏற்படும்.
5. முரண்பாடுகள், பிரச்சினைகள் தடுக்கப்படும்.
6. யாழ் மாவட்டத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள்
7. கிளித்தட்டு, கபடி, மான்வெண்டி சபாரி, கிட்டிப்புல், முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், தேங்காய் திருவுதல், வழுக்கு மரம் ஏறுதல்.

☛ **யாழ் மாவட்ட பாரம்பரிய விளையாட்டுக்களின இன்றைய நிலை**

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை விளையாட்டுக்கள் குறைந்துகொண்டே போகின்றன. ஆனால் தாச்சி விளையாட்டு யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தினால் ஓர் சில இடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதே போல் மாட்டுவண்டிச் சவாரியும் ஓர் சில இடங்களில் நடைபெறுகின்றன. பிரதேச ரீதியான போட்டிகளோ, மாவட்ட ரீதியான போட்டிகளோ நடைபெறுவது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

☛ **இதற்கான காரணங்கள்**

1. வீரர்கள் வேறு நவீன விளையாட்டுக்களில் ஈடுபடல்.
2. பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தாது விடுதல்.
3. நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை.
4. ஊக்குவிப்பாளர்கள் இல்லாமை.

போன்ற பல காரணங்கள் கூற முடியும்.

☛ **மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்**

1. யாழ் மாவட்ட பிரதேச செயலகங்கள் ரீதியாக இவ் விளையாட்டுக்களை நடாத்துதல்.
2. சங்கங்களைத் தோற்றுவித்தல்.
3. போதிய ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
4. வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் இப்போட்டிகளை நடாத்துதல் என்பனவாகும்.





யா / கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. தரசுதா இரத்தினசபாபதி மாகாணமட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாமிடத்தையும், அஞ்சல் ஓட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டார். இவர் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற கூடைப்பந்தாட்ட அணியிலும் இடம்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



யா / பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 17 வயதுப் பிரிவு வலைப்பந்து அணியினர் சென்ற வருடம் கோட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும், வலயமட்டத்தில் இரண்டா மிடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். இவ்வணியினரையும் அதிபர், பொறுப் பாசிரியர்கள் மற்றும் பயிற்றுனரையும் படத்தில் காணலாம்.

யா / பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 19 வயதுப் பிரிவு கரப பந்து அணியினர் சென்ற வருடம் வடக்கு கிழக்கு மாகாணச் சம்பியனாகி தேசிய மட்டத்தில் பங்குகொண்டு பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளனர். மேற்படி அணியினரையும் பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோரைப் படங்களில் காணலாம்.



தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிக் கண்காட்சிப் போட்டியில் 2008ம் ஆண்டில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி பெண்கள் அணியினர் முதலாம் இடத்தினையும், ஆண்கள் அணியினர் இரண்டாம் இடத்தினையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகினர். மேற்படி அணியினரையும், பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

**விளையாட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANDRA ஆதரவில் கலை அரங்கம்

## மோகினி ஆட்டம்



செல்வி. எ. பவித்திரா (B.FA., M.FA., India)
உப்புக்குளம், மன்னார்.

மஹா விஷ்ணு மோகினி ரூபமெடுத்து அசுரர்களை மயக்கி அசுரர்களிடமிருந்த அமுதத்தை தேவர்களிடம் கொடுத்தார். மகா விஷ்ணுவுடைய மோகினி ரூபத்தை சிவபெருமான் பார்க்கவிரும்பியதால் விஷ்ணு மோகினி ரூபமெடுத்து சிவபெருமான் முன் ஆடினார். அகில உலகமே இந் நடனத்தைக் கண்டு மயங்கியது. அதனால் இந்த நடனத்திற்கு மோகினி ஆட்டம் என்று பெயர் வந்தது.

முற்காலத்தில் தேவதாசிகள் என்று ஒரு வர்க்கம் இருந்து வந்தது. அக்காலத்தில் தேவதாசிகளாக இருந்தவர்களில் வீட்டிற்கு ஒருவர் கோயிலுக்குக் கொடுக்கவேண்டும் என்ற வழக்கமும் இருந்தது. இவ்வாறு கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள் கடவுளைத் தம் கணவனாக நினைத்து தாம் திருமணம் செய்து கொள்ளாமல் கோயிலுக்கே தொண்டாற்றி வந்தனர். பூஜை இடம்பெறும் வேளைகளில் இறைவன் முன்னிலையில் ஆடிய வந்ததாக ஒரு மரபு இருந்தது. இதுவே மோகினி ஆட்டம் எனப்பட்டது.

இந்நடனம் பண்டைய காலத்தில் கோயில்களில் இறைவனின் சந்நிதியில் மட்டுமே ஆடப்பட்டு வந்தது. சுவாதித் திருநாள் மகாராஜா திருவாங்கூரினை (தற்போதைய கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம்) ஆண்ட சமயத்தில் தஞ்சையில் இருந்து சென்ற ஆடலாசிரியர் வடிவேலு திருவனந்தபுரத்தில் அரச கலைஞராக வாழ்ந்தார். அச்சமயத்தில் சதிர், கதகளி ஆகியவற்றின் செய்முறைகளின் சேர்க்கையின் காரணமாகப் பிறந்ததே மோகினி ஆட்டம்.

பாதங்களை அகட்டிவைத்து கதகளியில் ஆடப்படும் நிலைகளை இந்த நடனத்தில் காணலாம். பெண்களைக் கையாளும் மரபு கொண்டதால் சதிரைப் போலலே சிருங்கார ரசத்தையும், லாசியத்தையும் முக்கிய அம்சமாக இந்த நடனம் கொண்டிருக்கும். சதிரில் பயன்படுத்தப்படும் ஜதீஸ்வரம், வர்ணம், பதம், தில்லானா போன்ற உருப்படிகளே இங்கும் காணப்படும். இது தவிர, சதிரில் இன்று நடைமுறையில் இல்லாதுபோன சொற்கட்டு என்ற உருப்படியும் மற்றும், பந்தாட்டம் போன்ற மிக நளினமான உருப்படியும் மோகினி ஆட்டத்தில் காணலாம். நல்ல அடவு கோர்வைகளும் அபிநயமும் சமமாக இடம்பெற்று சலிப்புத் தட்டாது அழகிய லாசியமாக இந்த மோகினி ஆட்டம் காணப்படும்.

திருமகள் தன் மோகினி அவதாரத்தில் காண்போர் மயங்கும் வண்ணம் ஆடிய நடனத்தை இந்த மோகினி ஆட்டத்தின் தன்மையோடு ஒப்பிட்டுப் பேசுவர். இந்த நடனத்திற்கு பெயர் இவ்வாறு வந்ததென்று கூறுவர். திருமோல் மோகினியாக உருமாறியபோது, சிவன் மோகினியிடத்து மயங்கியபோது "ஹரிஹர புத்திரனாக பிறந்தவரே மணிகண்டன் எனப்படும் ஐயப்ப சுவாமி என்பது கேளரத்து ஐதீகம்.

இந்நடனமாடும்போது தழைய தழைய வெண்ணிற ஆடை உடுத்தி சேர குலப் பெண்மணிகள் போல உயர்த்திப க்கவாட்டில் கொண்டை போட்டு இந்நடனத்தின் சிகை அலங்காரம் காணப்படும். வெண்ணிற ஆடையும் தங்கநிற ஆபரணங்களும் ஆஹார்ஜமாக அமைந்திருக்கும். சுத்த மத்தளமும் இடக்கையும் இதற்கு இன்றியமையாத இசைக்கருவிகளாகும்.

## மோகினி ஆட்டம்



செல்வி. கோ. தட்சாயினி (B.FA. (Hons), M.FA. (Hons) India)
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

மனிதனின் அழகிய படைப்புக்களே கலைகள் என்ற பெயரினைப் பெறுகின்றன. இவை வடிவானதாகவோ அன்றேல் நிகழ்த்துகைகளாகவோ அமையலாம். இதில் ஒருவர் எதன் மூலம் தன்னைத் தருகின்றாரோ அன்றேல் தருவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றாரோ அதுவே கலையென்று ஆகிவிடுகிறது. கலைகளில் முழுமை பெற்றது ஆடற்கலையாகும். இசைக்கலையும் ஒப்பனைக்கலையும் ஆடற்கலையின் அடக்கமாகவே உள்ளன. மனிதன் தன் இன்ப, துன்ப உணர்வுகளை உடல் அசைவினில் வெளிப்படுத்தும்போது அங்கு ஆடல் பிறக்கின்றது. மிகப் பிற்பட்ட காலத்தில் உருவான மோகினி ஆட்டம் கேரள மக்களின் ஆடற்கலையாக அதன் தோற்றுவாய் முதற்கொண்டு தென்படுகின்றது. மோகினியாட்டத்தை கேளரத்தின் பரதநாட்டியமெனக் கூறுவர். பிரபல பரதக் கலைஞரும், பரத நாட்டியம் மக்கள் மயப்படுத்தப்பட்டதோர் ஆடற்கலையாக வளரத் தன்னை அர்ப்பணித்த ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் மோகினியாட்டத்தினை "மெலினப்படுத்தப்பட்ட பரதம்" எனக் கூறுவர். திருமால் தனது மோகினி அவதாரத்தில் ஆடிய ஆட்டமாக இதற்கும் புராண வரலாறு கூறப்படுகின்றது. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது பெறப்பட்ட அமிர்தத்தை அசுரர்கள் உண்ணாதிருக்கத் திருமால் தனது மோகினி ஆட்டத்தால் அவர்களை மயக்கியதாகவும், அதுவே பின்னர் மோகினி ஆட்டமாக மாறியதெனவும் இதற்கான தோற்றுவாய் அமைகின்றது.

பரத முனிவரது நாட்டிய சாஸ்திரக் கோட்பாட்டினையே மோகினி ஆட்டம் பொதுவாகக் கொண்டுள்ளது. ஆயினும் இதனது மரபுத் தன்மை, பாணி, நுட்பம் என்பவற்றின் வெளிப்பாடுகளூடாக இரு ஒரு செவ்வியற் கலையாக 1835இற்குப் பின்னர் நிலைநிறுத்தப்படுகின்றது.

சேர நாட்டின் பண்டைய பாரம்பரியம் மிக்க மரபுவழிக் கலையாக போற்றப்படும் இவ்வாடற் கலையை நெறிப்படுத்தி, வளர்த்தெடுக்கக் காரணமானவர் திருவனந்தபுரம் சுவாதித் திருநாள் மகாராஜாவாகும். தஞ்சை நால்வருள் ஒருவரான ஆடல் ஆசிரியர் வடிவேலுவை திருவனந்தபுரத்து அரசவைக் கலைஞராக 1835இல் அவர் நியமித்திருந்தார். சதிர், கதகளி ஆகியவற்றின் செய்முறைகளின் சேர்க்கையாக இதனை வடிவேலு புத்துருவாக்கினார் எனக் கூறுவர். பெண்களைக் கையாளும் மரபுநிலைப் படுத்தப்பட்ட அமையும் மோகினி ஆட்டமானது சிருங்கார ரசத்தையும் லாசியத்தையும் முக்கிய அம்சங்களாகக் கொண்டுள்ளது.

1930இல் கேரளா கலாமண்டபத்தை நிறுவிய கவிஞர் வள்ளத்தோல் நாராயண மேனன் கதகளியுடன் கூடியாட்டம் மற்றும் மோகினி ஆட்டத்தையும் வளர்த்தெடுக்கலானார். மோகினி ஆட்டம் பற்றி அறிந்துகொண்ட ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், அவரால் உருவாக்கப்பட்ட சாந்திநிகேதனில் பரதநாட்டியத்துடன் இவ்வாட்டத்தையும் போதிப்பதற்காக கல்யாணிக்குட்டி அம்மாவை அழைத்து மோகினி ஆட்டத்தைப் போதிக்கலானார். காலப்போக்கில் கேரளத்தின் முக்கிய கலைவடிவமாகவும், ஏனைய இந்திய மாநிலங்களில் பரவிவரும் ஆடற்கலையாகவும் மோகினி ஆட்டம் வளர்வதாயிற்று.

தஞ்சாவூரில் குறவஞ்சிக் கூத்திற்கும், கேரளத்தின் மோகினி ஆட்டத்திற்கும் மிக ஒற்றுமைகள் தென்படுவதாக ஆய்வாளர்கள் கூறுவர். கேரளத்தின் கலை அடையாளங்கள் பல அவற்றுள் மிகச் சிறப்பானவை கதகளியும் மோகினி ஆட்டமும் ஆகும். கதகளி ஆண்களால் ஆடப்பட, மோகினி பெண்களால் ஆடப்படும். கதகளிக்கும் எமது நாட்டு மட்டக்களப்பு வடமோடிக் கூத்துக்குமிடையே ஒற்றுமைகள் உண்டு எனவும், அதேபோல் வடமோடிக்கூத்தில் வரும் நாடகசாலைப் பெண்டிரின் ஆட்டத்திற்கும், மோனியாட்டத்திற்குமிடையே சில ஒற்றுமைகள் உண்டு என்றும் இவை மேலும் ஆராயப்படவேண்டியவை எனவும் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் கருத்துத் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## கதகளி



இந்தியாவின் தென்மேற்கு கரையோரமாகவுள்ள கேரள மாநிலத்துக்குரிய சாஸ்திரீய நடனம் கதகளி ஆகும். "கதகளி" என்ற சொல்லுக்கு கதையை அடிப்படையாகக் கொண்ட ஆட்டம் என்பது பொருள். இதற்கு ஆட்டக்கதை என்ற மற்றொரு பெயரும் உண்டு. இது நிருத்யம், அபிநயம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தாலும், நாடகமே இதில் முதன்மை பெறுகின்றது. பரதரின் நாட்டிய சாஸ்திரம் இதன் நாடக இயல்புகள் கதகளியின் நாடகத் தன்மையுடன் பெரும்பாலும் ஒத்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கேரள மாநிலத்தில் நிலவி வந்த பல நடன மரபுகளிலிருந்து தோற்றம் பெற்ற கதகளியானது பல தனிச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. சமய முக்கியத்துவம் வாய்ந்த கதகளி நடன நாடகத்திற்கான ஒரு புராண, இதிகாச கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.

இந் நடனத்திற்கான பயிற்சியானது 10-15 க்கு இடைப்பட்ட வயதிலேயே தொடங்கப்படுவதுடன், ஓரளவு முழுமையினைப் பெறுவதற்கு 12 ஆண்டுகள் வரை கற்கவேண்டியுள்ளது. இதற்கான பயிற்சியில் உடல் தசை நார்களுக்கான பயிற்சிகள் இன்றியமையாதவையாகும். குறிப்பாக முகத்திலுள்ள உதடு, கண்புருவங்கள், கண்மணிகள், கீழ்க்கண்மூடிகள் ஆகியவற்றின் அசைவுகள் தனிச்சிறப்புடையவையாகும். இந் நடனத்தில் கண்களின் அசைவுகள் உணர்ச்சிகளை மிக நுட்பமாக வெளிப்படுத்தும் சாதனமாக அமைகின்றது. மேலும் பக்கத்திற்கு பக்கம் அசையும் அதிபங்க அசைவு, கால்களுக்கிடையில் இடைவெளி, பாய்ச்சல்கள், வீச்சுக்கள், பரத நாட்டியத்தில் அடவுபோல் கதகளியில் "சுவடு" என அழைக்கப்படும். அவை முன்பக்க சுவடு, பின்பக்க சுவடு, பக்க சுவடு போன்றவை. இங்கு நிருத்த அலகுகள் கலாசம் எனப்படும்.

இந்நடனத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்று அதன் ஒப்பனை முறையாகும். மிக உயர்ரக குறியீடுள்ள ஒப்பனையினை கதகளி பேணுகின்றது. அவர்களின் குண நலன்களையும் இனங்காணக்கூடியதாக ஒப்பனை முறை அமைந்திருக்கின்றது. ஆகார்ய அபிநயத்தை ஒரு பிரத்யேக மரபாகவே கதகளி பேணுகின்றது. பல வர்ணங்களால் செய்யப்படும் ஒப்பனைக்கான பொருட்கள் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களாகவே அமையும். கதகளி நடனக்காரர் ஒருவருக்கான ஒப்பனை 2 - 4 மணிநேரம் வரை எடுக்கின்றது. சில ஒப்பனையினை ஒருவர் செய்து முடித்தவுடன் அவன் தன்னை மறந்து நடிகனாகவே மாறிவிடுவதுடன் குறித்த பாத்திரத்தின் பெயராலேயே அவன் அழைக்கப்படுகின்றான்.

பச்சை (சுட்டி), கத்தி, தாடி, கரி, மினுக்கு என ஐந்து வகையான முகவேஷத்தை ஒட்டி கதக்களி நடிகர்கள் பிரிக்கப்படுகின்றார்கள். இப்பாத்திரங்கள் சாத்வீகம், இராஜச, தாமச குணங்களை வெளிப்படுத்தும் தன்மையுடையதாகக் காணப்படும்.

கதகளியின் அடிப்படை முத்திரைகள் இருபத்து நான்காகும். அவை பதாத, முத்ராக்ய, கதக, முஸ்டி, கத்தரிமுக, சுக துண்டக, கபித்த, கம்ஸபக்ஷ, சிகரா, கம்ஸாசிய, அஞ்சலி, அர்த்தச்சந்திர, முகுர, பிரமர, சூசிமுக, பல்லவ, திரிபதாக, மிருகஷீர்ச, சர்ப்பசிரச, வர்த்தமானத, அராள, ஊர்ணநாய, முகுல, கடகாமுகத என்பனவாகும். இவ் அடிப்படை முத்திரைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை

1. அஸம்யுத முத்திரை. 2. ஸம்யுத முத்திரை 3. மிஸ்ர முத்திரை 4. ஸமான முத்திரை என்பனவாகும்.

இந்நடன நிகழ்வுகள் இரவு 9 மணியிலிருந்து காலை 6 மணிவரை நடத்தப்பட்டு இருந்தபோதும் தற்காலத்தில் இக்கால அளவு குறைக்கப்பட்டுள்ளது. இந்நடனத்திற்கான பக்கவாத்தியங்களாக பாடகர் இருவர், சுத்த மத்தளம், செண்டை, எடதாளம், சேங்கலம் ஆகியவை காணப்படுகின்றது. கதகளியின் விசேட அம்சங்களான பேச்சில்லாத அபிநயம், சமயத்தொடர்பு, சண்டைக்காட்சி முதலியவை சம்பிரதாயமாக அக்காலத்திலிருந்தே நினைத்திருக்கின்றன. இவ்வாறாக பல தனிச் சிறப்புக்களைக் கொண்ட கதக்களியின் வளர்ச்சிப்போக்கிலே சென்ற நூற்றாண்டில் ஏனையநடனக் கலைகளைப் போல சிறப்புக் குன்றியிருந்த கதகளியினை சிறப்படையச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டோரில் வள்ளத்தோல் அவர்களின் பங்கு முக்கியமானது. 1930களில் கேரள கலாமண்டபத்தினை ஆரம்பித்து பல கலைஞர்களை உருவாக்கி இக் கலைக்கு புதுப் பொலிவைக் கொடுத்தார் அதனைத் தொடர்ந்து பல கலைஞர்கள் இதில் ஈடுபட்டு இக் கலையினை பல இடங்களிலும் பரவச் செய்தனர். அந்த வகையில் குருசோபிநாத், அவர் பாரியார் அவர்களது வருகையுடன் இலங்கையிலும் இக்கலையில் சிலர் ஈடுபட வழிகோலியது.



திருமதி றஜிதா ராகவன்
விரிவுரையாளர்,
நடனத்துறை, யாழ் பல்கலைக்கழகம்



ANDRA DIGITAL IMAGE
உயர் கணனி வடிவமைப்பில்
- டிஜிற்றல் போஸ்ட்
- மகசீன் வகைகள்
- பிளெக்ஸ் பனர்கள்
- லேபிள்கள்

ADORNA CARDS
www.andradesigns.com
மிகக் குறைந்த விலையில் உயர்தரமான
திருமண அழைப்பிதழ்கள்
யாழ் நகரில் முதன் முறையாக இணையத்தளத்தினூடாக உயர்தரமான திருமண அழைப்பிதழ்கள்...
இணையத்தள முகவரி: www.andradesigns.com
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
# 356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
# 6D.கே.கே.எஸ் வீதி, உப்புமடம் சந்தி, கோண்டாவில்.
☎ 021-4590268
021-222 8929

கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது



Printed by: ANDRA DIGITAL IMAGE